ஸ்ரீ:

ஸ்ரீராமாநுஜன் 58

ஸ்ரீ வைஷ்ணவ ஸம்பிரதாய தத்துவங்களை யுணர்த்த மாதந்தோறும் வெளிவரும் பத்ரிகை

[மதராஸ் ஸத்க்ரந்த ப்ரகாசந ஸபையின் வெளியீடு]

ஆசிரியர்: ஸ்ரீகாஞ்சீ பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர்.

ஸம் 5 || அக்டோபர்மீ 1953 விஜய ஹூ ஐப்பசிமீ || இதழ் 10

இராமாநுச நூற்றந்தாதி பாசுரம் 58

பேதையர் வேதப்பொருளிதென் றுன்னி * பிரமநன்றேன்
றோதி மற்றெல்லாவுயிரு மஃதென்று * உயிர்கள்மெய்விட்
டாதிப்பரனே டொன்றுமென்று சொல்லுமவ்வல்லலெல்லாம்
வாதில்வென்றான் * எம்மிராமாநுசன் மெய்ம்மதிக்கடலே.

எம்பெருமானர், குத்ருஷ்டிகளின் குத்ஸிதமான வாதங்களைக் கண்டித்தபடிகளில் ஒருபடியைத்தெரிவிப்பது இப்பாட்டு. சில பேதையர்கள் [மூர்க்கர்கள்] தாங்கள் சொல்லுவதே வேதங்களின் உண்மையான பொருளென்று கொக்கரித்துக்கொண்டு அபார்த்தங்களைப் பிதற்றுவர்கள்; பரப்ரஹ்மம் ஸர்வ விலக்ஷணம்; ஜீவாத்மாக்களெல்லாம் பரப்ரஹ்மத்தில் ஓர் பகுதி. இப்போது உபாதியினல் வெவ்வேருகத் தோன்றுகின்றன. அவ்வுபாதி கழிந்தபின் ஜீவர்களெல்லாரும் பரப்ரஹ்மத்தோடு ஒற்றுமையை அடைந்துவிடுகின்றனரே யொழிய, நித்யர்களென்றும் முக்தர்களென்றும் ஜீவாத்மவர்க்க வகுப்பு திருநாட்டிலிருப்பதாகச் சொல்லுவது தவறு—என்று கூறும் கூற்றுக்களையெல்லாம் தத்வஜ்ஞான நிதியான எம்பெருமானர் வாதத்தில் கண்டித்து உண்மைப்பொருளை ஸ்தாபித்து வெற்றி பெற்ருரென்கிறது இப்பாட்டு.

சித்து அசித்து ஈச்வரன் என மூலப்பொருள்கள் மூன்று. இம்மூன்றும் ஸத்யமும் நித்யமுமாம். சித்து அசித்து என்கிற வகுப்பினுள் அடங்கிய எல்லாப் பொருள்களும் ஈச்வரனுக்குச் சரீரங்களாம். அநாதியான அவித்யையினல் செய்யப்பட்டுத் திரண்டு கிடக்கும் கருமங்கள் காரணமாக வுண்டான ப்ரக்ருதி ஸம்பந்தத்தினல் ஜீவாத்மாக்களின் இயற்கையான ஞானனந்த ஸ்வரூபம் மறைக்கப்பட்டுக் கிடக்கின்றது. அக்கருமங்கள் ஒழிந்தபின் ஸ்வஸ்வரூபம் ஆவிர்ப்பவிக்கும். எம்பெருமானுடைய திருவருளால் கருமமொழிந்து ஸ்வஸ்வரூபம் விளங்கப்பெற்றுப் பரமபதஞ்சென்று கைங்கர்யாநுபவமும் குணநுபவமும் பண்ணிப் பரமானந்தமடைவது மோக்ஷமாம்—என்றிவ்வகையான தத்துவப்பொருள்களை எம்பெருமானர் ஸ்தாபித்தருளினர் என்க. ... ... (*)

நேர்ந்ததொரு தவறு

இதற்குமுன் 55, 56, 57 ஆகிய மூன்று நம்பர்களடங்கிய ஸஞ்சிகை [அறுபத்திரண்டு உபந்யாஸமாலை] யை நாம் வெளியிட்டபோது ஷை பத்திரிகைகளை போஸ்டு செய்வதற்காகத் தபாலாபீசுக்கு அனுப்புகையில் 40 ஸஞ்சிகைகள் வரையில் களவு போனதாகப் பிறகு தெரியவந்தது. அதனால் 40 நபர்களுக்கு ஷை பத்ரிகை (55, 56, 57 நெ.) சேராமலிருக்கவேண்டும். சேரவில்லையென்று தெரிவித்த சிலர்க்கு அனுப்பினோம். இன்னும் யாருக்காவது சேராமலிருந்தால் தெரிவிப்பது. தங்கள் சந்தா நம்பரையும் குறிப்பிட வேண்டுகிறோம்.

(மானேஜர்)

ஐதிஹ்ய நிர்வாஹ ரத்னமாலை.

நாலாயிரதிவ்யப்ரபந்த வ்யாக்கியானங்களில் அநேக ஐதிஹ்யங்களும் நிர்வாஹங்களும் அருளிச் செய்யப்பட்டிருக்கின்றன. அவை ரஸிகர்களுக்கு மிகவும் மநோவிநோதகரங்களாதலால் அவற்றைத் தனியே பிரித்தெடுத்துத் தனிப்புத்தகமாகவெளியிட்டுவைத்தால் மஹோபகாரமாயிருக்குமென்று பல பெரியார்கள் நியமித்தருளினதை யநுசரித்து அவற்றைத் தனியே பிரித்தெடுத்துத் தனிப்புத்தகமாக வெளியிட்டுவைத்தால் மஹோபகாரமாயிருக்குமென்று பல பெரியார்கள் நியமித்தருளினதை யநுஸரித்து அவற்றைத்திரட்டி ஐதிஹ்ய நிர்வாஹ ரத்நமாலையென்னும் பெயரால் வெளியிட்டு வருகிறோம். கீழே நெ. 49ல் முதலாயிர வியாக்யானங்களிலுள்ள ஐதிஹ்யநிர்வாஹங்கள் வெளியிடப்பட்டன. பிறகு 50ல் பெரியதிருமொழியாயிரத்தின் வியாக்கியானத்திலுள்ளவை வெளியிடப்பட்டன. இயற்பா வியாக்கியானங்களிலும் பகவத் விஷயத்திலும் [ஈட்டிலும்] உள்ளவை இவ்விதழில் வெளியிடப்படுகின்றன. இயற்பாமுடிந்து பகவத்விஷயத்தில் பாதிபாகம் இதில் வெளிவந்திருக்கிறது. அதில் சேஷமுள்ளது அடுத்தமாதத்து இதழில் தவறாது வெளிவரும்.

இந்த ஐதிஹ்யங்களும் நிர்வாஹங்களும் பெரும்பாலும் வியாக்கியான ஸாபேக்ஷங்கள்; காலக்ஷேபகோஷ்டிகளில் அந்வயித்துப் பலகால் கேட்டவர்களுக்கல்லது அவற்றின் பொருள் நிஸ்ஸந்தேஹமாக விளங்கமாட்டாதாகையால் எளிய நடையில் கருத்துரையுமெழுதி வெளியிடவேணுமென்று பலரும் ருசியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறார்கள். இது அவசியம் நிறைவேற்றவேண்டிய கோரிக்கையே. நிறைவேற்றக்கடவோம்.

சிலமாதங்களுக்கு முன்பு ஸ்ரீராமாயண ஸௌரபம் என்னும் புத்தகம் வெளியிட்டிருந்தோம். நாலாயிர வியாக்கியானங்களில் ஸ்ரீராமாயணச் லோகங்களை ஸந்தர்ப்பங்களுக்கு ஏற்றவாறு உதாஹரித்து அவற்றுக்கு இன்சுவைமிக்க வியாக்கியானங்களையருளிச்செய்திருக்கிறார்களன்றோ; அந்த வியாக்கியானத் தொகுதியே ஸ்ரீராமாயண ஸௌரபமென்பது, இதுவும் வித்வான்களுக்கன்றி மற்றையோர்களுக்கு விசேஷமாகப் பயன்படாமலிருப்பதால் இதற்கும் எளியநடையில் கருத்துரையொன்று அமையவேண்டுமென்று பலர் கோரியிருக்கிறார்கள். இக்கோரிக்கையும் க்ரமேண நிறைவேற்றப்பெறும்.

சந்தாதாரர்களுக்கு அறிவிப்பு


அன்பர்களே! ஸ்ரீராமாநுஜனுக்கு . ஐந்தாவதாண்டு நிறையப்போகிறது. பலர் கீழ் வருஷங்களுக்கும் சந்தாபாக்கி வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அவரவர்களுக்கு நாம் தனியாகக் கடிதமெழுதப்போகிறதில்லை. சந்தா செலுத்தாதவர்களுக்குப் பத்திரிகை நிறுத்தப்படுமென்று முன்பு வெளியிட்டிருந்தோம். அவ்வபிப்பிராயத்தையும் மாற்றிக்கொண்டோம். அவர்களாகத் திருப்பியனுப்புகிற வரையில் பத்ரிகையனுப்பிக்கொண்டிருப்போமென்று கருத்துக்கொண்டோம். வஞ்சிப்பதனால் ஒரு ஸுக்ருதமுண்டென்று நினைப்பவர்கள் அப்படியே நினைத்திடுக.

இங்ஙனம்

மானேஜர்—ஸத்க்ரந்தப்ரகாசந ஸபை.

ஸ்ரீ:

ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.



ஐதிஹ்ய நிர்வாஹ ரத்னமாலை

நான்காவதாயிரம்

திருவாய்மொழி-பகவத்விஷயம்-ஈடு.

(மஹாப்ரவேசம்—முதல் ச்ரிய:பதியில்,)

1. "ஒரு குருவி பிணைத்தபிணை ஒருவராலவிழ்க்கப்போகிறதில்லை; ஸர்வசக்தி கர்மாநுகுணமாகப் பிணைத்த பிணையை அவனையே கால்கட்டி அவிழ்த்துக்கொள்ளுமித்தனை காண்" என்று பிள்ளை திருநறையூரரையர் வார்த்தை.

2. "இவர்க்கு ப்ரியாப்ரியங்கள் ஒருகாலும் முடியாதே பர்யாயேண உண்டாயிருக்கையாலே இவர்க்கு சிந்தயந்திப்படி நித்யமாய்ச் செல்லுகையாலே இவரை தீர்க்கசிந்தயந்தி என்றாயிற்று நம் முதலிகளருளிச் செய்வது.

3. "..........ஸகலவேத தாத்பர்யம் இவ்வர்த்தபஞ்சகமென்னுமிடத்தைப் பெரிய வங்கிப்புரத்துநம்பி திருவாய்மொழிக்கு வாக்யார்த்தமாக அருளிச் செய்தார்."

முதற்பத்து முதல் திருவாய்மொழி—பா—1. உயர்வற.

1. (அஹமஸ்யாவரோ ப்ராதா குணைர் தாஸ்யமுபாகத:) என்னுமாப்போலே. திருவடி இளையபெருமாளை "நீரிவர்க்கென்னாவீர்"! என்ன "பெருமாளு மொருபடி நினைத்திருப்பர், நானுமொருபடி நினைத்திருப்பே னென்றார்; அவர் "நினைத்திருக்கும்படியென், நீர் நினைத்திருக்கும்படி யென்?" என்ன; "அவர் தம் பின்பிறந்தவனென்றிருப்பர், நான் அவர் குணங்களுக்குத் தோற்று அடியேனாயிருப்பன்" என்றாரிறே.

2. (உடையவன்) குணங்கள்தன்னை அஸ்தியென்று விடுமளவன்றிக்கே இவற்றையிட்டு நிரூபிக்கவேண்டும்படியா யிருக்கும். அதாவது ஆகந்துகமன்றிக்கே ஸ்வரூபாநுபந்தியாயிருக்குமென்றபடி. ஆழ்வான் பிள்ளைப்பிள்ளையைப் பார்த்து "நிர்க்குணமென்பார் மிடற்றைப் பிடித்தாப்போலே ஆழ்வார் 'நலமுடையவன்' என்றபடி கண்டாயே" என்று பணித்தான். ...."ஸ்வாபாவிகாநவதிகாதிசயாஸங்க்யேய கல்யாண குணகண:" என்று இதுக்கு ஆளவந்தாரருளிச்செய்யுட் சந்தை.

3. (மயர்வற இத்யாதி) ஜ்ஞாநாநுதயம், அந்யதாஜ்ஞாநம், விபரீதஜ்ஞாநம், என்கிறவிவை வாஸனையோடே போம்படியாக. "ஜ்ஞாநாநுதயமாவது, தேஹாத்மாபிமானம், அன்யதாஜ்ஞாநமாவது, தேவதாந்தர சேஷமென்றிருக்கை. விபரீதஜ்ஞானமாவது ஸ்வதந்த்ரமாகவும் ஸ்வபோக்யமாகவும் நினைத்திருக்கிற கேவலனுடைய ஜ்ஞானம், என்று நம்பிள்ளையருளிச்செய்வர்.

4. (மதிநலம்) "ஜ்ஞானபக்திகளிரண்டையும் தந்தான்" என்று நிர்வஹிப்பாருமுண்டு; அன்றிக்கே "நலமானமதியைத் தந்தான் என்றாய் முளைக்கும்போதே வயிரம் பற்றி முளைக்கும் பதார்த்தம் போலே பக்திரூபாபந்நஜ்ஞானத்தைத் தந்தானென்கிறார்" என்று பட்டர் அருளிச்செய்யும்படி. கர்மஜ்ஞாநாநுக்ருஹீதையான பக்தி ஸ்தானத்திலே பகவத்ப்ரஸாதமாய் அனந்தரம் கைங்கரியத்துக்குப் பூர்வ க்ஷணவர்த்தியான பக்தியாயிற்றிவாது. "ஆழ்வார் ப்ரபன்னரோ? பக்திநிஷ்டரோ? என்று எம்பாரைச் சிலர் கேட்க, "ஆழ்வார் ப்ரபன்னர், பக்தி இவர்க்கு தேஹயாத்ராசேஷம்" என்றருளிச் செய்தார்; என்போல வென்னில்; நாமுமெல்லாம் ப்ரபன்னராயிருக்கச்செய்தே ஆண்டாறுமாஸத்துக்கு ஜீவனம் தேடுகிறாப்போலே; *உண்ணுஞ்சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையுமெல்லாங் கண்ணனிறே இவருக்கு.

5. (துயரறு) "துயரறுக்கும்" என்று முன்புள்ள முதலிகள் அருளிச்செய்யும்படி; ஸமஸ்ததுக்காபநோதந ஸ்வபாவமான திருவடிகள்-ஸகலாத்மாக்களுடையவும் துக்கத்தைப் போக்குகையே ஸ்வபாவமான திருவடிகள். "துயரறும்சுடரடி" என்று எம்பெருமானாரருளிச்செய்யும்படி. "வ்யஸநேஷு மநுஷ்யாணாம் ப்ருஶம் பவதி து:க்கித:" என்றால் துக்கநிவ்ருத்தியு மவனதாயிருக்குமிறே. இவர் துயரறத் தான் துயர் தீர்ந்தானாயிருக்கை. இத்தால் இவர் மயர்வற அவன் துயரற்றபடி.

(1-1-2 மனனகம்.)

6. (எதிர்நிகழ்கழிவினுமினனிலன்) "திரள வொப்பில்லையாகில் ஒருவகையாலே தான் ஒப்புண்டோவென்னில், அதுவுமில்லை என்கிறது" என்று நிர்வஹிப்பாருமுண்டு; அங்ஙனன்றிக்கே, பட்டர் "ஸாதர்மிய த்ருஷ்டாந்த மில்லையென்றது முன்பு, வைதர்மிய த்ருஷ்டாந்த மில்லை என்கிற திங்கு" என்று.

(1-1-6 நின்றனர்.)

7. ப்ரவ்ருத்தி அவனதீனையாகிறதுவேணுமாகில், நிவ்ருத்திக்கவன் வேணுமோ?" என்றெம்பாரைக் கேட்க; "ஸ்வர்க்கத்தில் நின்றும் விழுகிற த்ரிசங்குவை சக்திமான் நிற்கச்சொல்ல நிற்கவேண்டிற்றுக் கண்டாயே, அப்படியே நிவ்ருத்திக்குமவன் வேணுங்காண்" என்றருளிச்செய்தார்.

(1-2 வீடுமின்முற்றவும். ப்ரவேஶம்.)

8. இத்திருவாய்மொழிதன்னை, ஆளவந்தார் அருளிச்செய்தாராகத் திருமாலையாண்டான் ப்ரபத்திவிஷயமாக்கி நிர்வஹித்துக்கொண்டுபோந்து, எம்பெருமானாரு மப்படியே அருளிச்செய்து கொண்டுபோந்து, பாஷ்யந்தலைக்கட்டினபின்பு பக்தி விஷயமாக வருளிச்செய்து கொண்டு போருவர், பின்பு எம்பாருமப்படியே யருளிச்செய்தார்.

9. "ஒருவனுக்கு வைஷ்ணவத்வமுண்டு, இல்லை என்னுமிடம் தனக்கே தெரியுங்காண்" என்று ஜீயர் பலகாலு மருளிச்செய்வர்; பிறர் அனர்த்தங்கண்டால் ஐயோ! என்றிருந்தானாகில் "நமக்கு பகவத் ஸம்பந்தமுண்டு" என்றிருக்கவடுக்கும்; இத்தனையும் பட்டிடுவானுக்கென்றிருந்தானாகில், "நமக்கு பகவத் ஸம்பந்த மில்லை என்றிருக்கவடுக்கும்" என்று

(1-2-7 அடங்கெழில்.)

10. ஒரு வ்யாபாரி, ஸ்த்ரீ கர்ப்பிணியான ஸமயத்திலே அர்த்தார்ஜனம் பண்ணவேணுமென்று போவது; அவளும் பிள்ளைபெற்று, அவனும் பக்வனாய் தனக்கும் தமப்ப

னுடைய வ்யாபாரமே யாத்ரையாய், அவனும்போய் இருவரும் சரக்கு பிடித்துக் கொண்டுவந்து ஒரு பந்தலிலே தங்குவது; அது இருவருக்குமிடம் போராமையாலே அம்ப றுத்தெய்யவேண்டும்படி விவாதம் ப்ரஸ்துதமான ஸமயத்திலே, இருவரையு மறிவா னொருவன் வந்து "இவனுன் பிதா, நீயவன் புத்ரன்" என்றறிவித்தால், கீழிழந்த நாளைக்கு சோகித்து, இருவர் சரக்கு மொன்றாய், அவன் ரக்ஷகனாய் இவன் ரக்ஷ்யமாய் அன்வயித்து விடுமிறே.

11. ஒரு ராஜபுத்ரன் ஒரு உத்யானத்தைக்கண்டு புகவஞ்சினால் "உன்தமப்பனது காண்" என்னவே நினைத்தபடி புக்குப் பரிமாறலாமிறே.

(**1-2-9** ஒடுங்கவவன்கண்.)

12. ஓரயனத்தினன்று குன்றத்துச் சீயர், எம்பெருமானார் ஸ்ரீபாதத்திலே புக அவருடைய சிறுபெயரைச் சொல்லி "சிங்கப்பிரான்! இன்று அயனங்கிடாய்" என்ன, திருவுள்ளத்தி லோடுகிற தின்னதென் றறியாமையாலே அவர் பேசாதிருக்க "இத்தேஹ ஸமனந்தரத்திலே ப்ராப்தி கண்ணழிவற்ற பின்பு நடுவு விரோதியாய்ச் செல்லுகிற நாளிலே ஓராண்டு கழியப்பெற்றவிது உனக்கொன்றாயிருந்ததில்லையோ! என்றருளிச் செய்தார்.

13. எம்பார் ஒருருவிலே "பின்னு மாக்கை விடும்பொழு தெண்ணே" என்று, இங்ஙனே காரணமானது கழிந்தபோதே கார்யமும் தன்னடையே கழிந்ததேயன்றோ! ப்ராப்திய மினிக் கைபுகுந்ததேயன்றோ! இனி சிந்தா விஷயமுண்டோ?" என்றருளிச் செய்தார்.

(**1-2-10** எண்பெருக்கந்நலத்து.)

14. இப்பாட்டாலே திருமந்திரத்தை ஸார்த்தமாக வருளிச் செய்கிறார். ஆழ் வானிப்பாட்டளவும்வரப் பணித்து இப்பாட்டளவிலே வந்தவாறே "இத்தை உந்தம்மா சார்யர்கள் பக்கலிலே கேட்டுக்கொள்ளுங்கோள்" என்ன, பட்டரும், சீராமப்பிள்ளையு மெழுந்திருந்து போகப் புக்கவாறே அவர்களை அழைத்து "இன்னபோ தின்னாரிருப்பார், இன்னார் போவார் என்று தெரியாது; இருந்து கேளுங்கோள்" என்று திருமந்திரத்தை யுபதேசித்து, இப்பாட்டை நிர்வஹித்து "இப்பாட்டை இதுக்கர்த்தமாக நினைத்திருங் கோள்" என்று பணித்தான்.

(**1-3** பத்துடை யடியவர் ப்ரவேசம்.)

15. "ஸர்வேச்வரனரியனென்றால் ஸம்ஸாரத்தில் ஆள்பற்றாதென்று அவனெ ளிமையை உபபாதித்துக்கொண்டு போந்தோம், அதுதானே அவர்களுக்கு "இத்தனை யெளியனோ" என்று விடுகைக் குடலாயிற்று; "அவ்வெளிமைதானே ஆதரிக்கைக்கு உடலாயிற்றது உமக்கொருவருக்குமேயிறே" என்று எம்பாரைப்பார்த்து உடையவர் அரு ளிச்செய்தருளினாராம்.

(**1-3-1** பத்துடையடியவர்.)

16. (மத்துறு கடைவெண்ணெய்) "கடையா நிற்கச்செய்தே பசியரா யிருக்கு மவர்கள் சோறுசமையப்பற்றாமல் வெந்தது கொத்தையாக வாயிலிடுமாப்போலே, கடையப் பற்றாமல் நடுவே யள்ளி அமுதசெய்யும்படியைச் சொல்லுகிறது" என்று பிள்ளான் பணிக்கும்படி.

(1-3-2. எளிவரும்)

17. (நிலைவரம்பில) "இன்னவவதாரம் இன்ன சேஷ்டிதமென்றில்லை." என்று பூர்வாசார்யர்கள் நிர்வாஹம். பட்டர் இவ்விரண்டையும் நிலையில்லாமையிலே கொண்டு, "இனி வரம்பில்லாமையாவது—அவதரித்தெளியனாய்நின்றநிலைதன்னிலே பரத்வந்தோற்ற நிற்கிலும் நிற்கும்" என்று.

(1-3-8 நாளுநின்றடும்.)

18. (நம் திருவுடை யடிகள் தம்) "ஸர்வேச்வரனை யாச்ரயித்தானாகில் அவன் பலப்ரதனாகிறான், பிராட்டியைப் புருஷகாரமாகப் பற்றவேண்டுகிறதென்" என்று நஞ்சீயர் பட்டரைக் கேட்க; "நாளுநந் திருவுடையடிகள் தம் நலங்கழல் வணங்கி" என்று, அவள் முன்னாக ஆச்ரயிக்கவேணு மென்னாநின்றது கண்டீரே' என்றருளிச்செய்து "அவனை யாச்ரயிக்குமிடத்தில் இவன் குற்றம் பாராதே தன்னிழலிலே இவனை வைத்து அவன் பக்கல் முகம் பெற்றவாறே குற்றத்தைப் பொறுப்பிக்கு மவள் முன்னாகப் பற்றவேணும்."

(1-3-10 துயக்கறு.)

19. (பெருநிலமித்யாதி) "மனோவாக்காயங்களாலே அனுபவிக்கப் பெற்றேனென்கிறார்" என்று பிள்ளான் பணிக்கும்படி. "இவற்றாலே அனுபவிக்கப் பாரிக்கிறார்" என்று ஜீயரருளிச்செய்யும்படி.

(1-4 அஞ்சிறைய ப்ரவேசம்.)

20. முற்காலத்திலே அல்பம் விவக்ஷிதனா யிருப்பா னொருவன் "வீதராகரா யிருப்பார் பரிக்ரஹித்துப் போருகிறதொன்றாயிருந்தது, தத்வபரமாக வடுக்கும்" என்று இத்திருவாய்மொழியளவும் வர அதிகரித்து, இத்திருவாய் மொழியளவிலே வந்தவாறே "இது காமுகவாக்யமாயிருந்ததீ!" என்று கைவிட்டுப் போனான்; "நிதித்யாஸிதவ்ய:" என்று விதிக்கிற பகவத்காமமென்றறிந்திலன் பாக்யஹானியாலே."

(1-4-2 என்செய்யதாமரைக்கண்.)

21. திருக்கோட்டியூரிலே தெற்காழ்வான் கோளரியாழ்வானுக்கு தீர்த்தத் துறையிலே சொன்னவார்த்தை- "ஒரு முழக்காலும் இரண்டு முழக்காலும் போகாது காண் - தெற்காழ்வார் கையிற் திருவாழியாலே வினையை யறுத்துக்கொண்டு போகிலைத் தனையொழிய, ஒன்றிரண்டு முழக்கால் போகாதுகாண் நான் பண்ணின பாபம்."

22. (இனம்) என்றவித்தை இன்னம் என்றாக்கி-"எங்களபிமதம் பெறுகைக்கெங்கள் பக்கலொரு நன்மையில்லாத பின்பும் தாழ்க்குமித்தனையோ! என்கிறாள்" என்று பிள்ளை திருநறையூரரையர் பணிக்கும்படி.

(1-4-3 விதியினால் பெடைமணக்கும்.)

23. (கள்வர்க்கு) "வஞ்சகர்க்கு" என்று திருமாலையாண்டான் நிர்வஹிக்கும்படி. எம்பெருமானார், "ஒன்றைநினைத் தொன்றைச் செய்தவற்கு" என்றருளிச் செய்வர்.

(1-4-4-என்னீர்மை கண்டிரங்கி.)

24. பட்டரை யொருதமிழன் "கேட்டிரங்கி யென்னாதே கண்டிரங்கி என்னப் பெறுமோ", என்ன; "அணைத்தகை நெகிழ்த்தவளவிலே வெளுத்தபடி கண்டால் பிரியத் தகாதென்றிருக்கவேண்டாவோ; "இப்படி கூடுமோ." என்னில் "புல்லியித்யாதி, *காதலர் தொடுவுழியித்யாதி. உதாக்கித்தமிழ் போகாதோ" என்றார்.

(1-4-5-நல்கித்தான்.)

25. (அருளாயே) திர்யக்கை "அருளாய்" என்கிறதேதென்ன "நம்பியேறு திருவுடையான் தாஸர் திருநாட்டுக்கு நடந்தார்" என்று பட்டருக்கு விண்ணப்பஞ்செய்ய, தனுக்கென் றெழுந்திருந்து "அவர் ஸ்ரீவைஷ்ணவர்களுடன் பரிமாறும்படிக்கு, திருநாட்டுக் கெழுந்தருளினரென்ன வேணுங்காண்" என்றருளிச்செய்தார்.

(1-4-7 என்பிழைகோப்பதுபோல.)

26. (அருளாததிருமாலார்க்கு) "ந கச்சிந்நாபராத்யதி யென்பாரும் அருகேயிருக்க எங்கள் குற்றம்பார்த்து அவள் பக்கல் முகம்பெற விருக்கிருரே!" என்று நஞ்ஜீய ரருளிச் செய்யும்படி. நானிப்படி நோவுபட வேண்டுகிறது-அவனுக்கவள் முகங்கொடுத்து அங்கே துவக்குகையிறே யென்று இன்னாதாகிருள்" என்று பிள்ளான் பணிக்கும்படி.

27. (திருவடியின்தகவினுக்கு என்பிழைத்தாள்) தேவரீர் க்ருபைக்குத் தண்ணீர்த் துரும்பாக ஏதேனும் ப்ரதக்ஷிண நமஸ்காராதிகள் பண்ணிற்றுண்டோ" என்று நம்பிள்ளை யருளிச்செய்யும்படி.

(1-4-8-நீயலேயே சிறு பூவாய்.)

28. (வாயலகிலின்னடிசில்வைப்பாரை நாடாய்) பெரிய திருமலை நம்பி தம்முடைய அந்திமதசையிலே தமக்கொரு வெண்ணெய்க்காடும் பிள்ளையாயிற்று திருவாராதனம், அவர் திருமுன்பில் திருத்திரையை வாங்கச்சொல்லி "சாயலொடு மணிமாமை தளர்ந்தேன் நானினி யுனது வாயலகி லின்னடிசில் வைப்பாரை நாடாயே" என்ருராம்.

(1-4-9 நாடாதமலர்நாடி.)

29. (நாடாதமலர்நாடி) "ஆத்மபுஷ்பத்தைச் சொல்லுகிறது" என்பாருமுண்டு. அங்ஙனன்றிக்கே, ஜீயர் "எண்டிசையுமுள்ளபூக்கொண்டு" என்கிறபடியே, தேடவரிய புஷ்பங்களெல்லாந் தேடி" என்றருளிச்செய்வர்.

(1-5-2 நினைந்துநைந்து.)

30. (நினைந்தவெல்லாப்பொருள்களுக்கும் வித்தாய்) "நினைத்தல்-கலத்தலும், கூடலுமாய், ஸ்வஸ்தமாய்த் தன்னுடனே கூடிக்கிடக்கிற ஸகல பதார்த்தங்களுக்கும் காரணமாய்" என்று பிள்ளையமுதனர் நிர்வஹிப்பர். அன்றியே இப்படி தன் திருவுள்ளத்தாலே விஷயீகரிக்கப்பட்ட ஸகல பதார்த்தங்களுக்கும் காரணமாய்.

(1-5-5-மானேநோக்கி)

(அரும்பதவுரையில்.)

31. (போம்பழியெல்லாம்அமணன் தலையோடே) என்னுமாப்போலே பெருமாள் செய்தததையுமவன் தலையி லேறிட்டுச் சொல்லுதலென்றபடி. (அமணன் தலையோடே) அதாவது, ஒருகள்ளன் ஒரு ப்ராம்மண க்ருஹத்திலே கன்னமிட, அது ஈரச்சுவ ராகையாலே, இறுத்திக்கொண்டு அவன்மரிக்க, அவ்வளவில், அவன் பந்துக்கள் வந்து ப்ராஹ்மணனை "பழிதரவேணும்" என்ன இரண்டு திறத்தாரும், ராஜாவின் பாடேபோக அந்த ராஜாவும், அவிவேகியாய் மூர்க்கனுமாகையாலே "ப்ராஹ்மணு! நீ யீரச்சுவரை வைக்கையாலே யன்றோ அவன் முரித்தான், ஆகையாலே நீ பழிகொடுக்கவேணும்" என்ன, அவன் "எனக்குத் தெரியாது, சுவர்வைத்த கூலியாளைக் கேட்கவேணும்" என்ன, அவனை அழைத்து "நீயன்றோ ஈரச்சுவர் வைத்தாய், நீ பழிகொடுக்கவேணும்" என்ன, அவனும் "தண்ணீர் விடுகிறவன் சோரவிட்டான், என்னுற் செய்யலாவதென்" என்ன, அவனை

அழைத்துக் கேட்க, அவனும் "குசவன் பெரும்பானையைத் தந்தான், அதினாலே நீரேறிற்று" என்ன, அவனை அழைத்துக் கேட்க, அவனும் "என்னால் வந்ததன்று, ஒரு வேச்யை போகவரத் திரிந்தாள், அவளைப்பார்க்கிற பராக்கிலே பானை பருத்தது" என்ன, அவளை அழைத்துக்கேட்க, அவளும் "என்னாலன்று, வண்ணான் புடவை தாராமையாலே போகவரத் திரிந்தேன்" என்ன, அவனை அழைத்துக்கேட்க, அவனும் "என்னாலன்று, துறையில் கல்லிலே ஓர் அமணன் வந்திருந்தான்; அவன் போகவிட்டுத் துணி தோய்க்க வேண்டிற்று" என்ன, அந்த அமணனைத்தேடிப்பிடித்துக்கொண்டுவந்து "நீயன்றோ இத்தனையுஞ் செய்தாய், நீ பழிகொடுக்கவேணும்" என்ன அவன் மௌனியாகையாலே பேசாதிருக்க "உண்மைக்கு உத்தரமில்லை யென்றிருக்கிறான், இவனே யெல்லாஞ் செய்தான்" என்று ராஜா அவன் தலையரிந்தான். இக்கதையை அநுஸந்திப்பது.)

(**1-5-11** மாலேமாயப்பெருமானே)

32. (பாலேய்தமிழர்) பால்போலே இனிய தமிழையுடையவர்கள். (இசைகாரர்) இயலுக்கிசைய இசையிடவல்லவர்கள். ஸ்ரீமதுரகவிகளையும் நாதமுனிகளையும்போலே யிருக்குமவர்கள். (பத்தர்) பகவத்குணாநுபவத்தி லிவர் தம்மைப்போலே "காலாழும் நெஞ்சழியும் கண்சுழலும்" என்றிருக்குமவர்கள். ஆழ்வாரொருருவிலே, ஸ்ரீபராங்குசநம்பியை— பாலேய்தமிழ ரென்கிறது. இசைகாரரென்கிறது-ஆழ்வார் திருவரங்கப்பெருமாளரையரை. பத்தரென்கிறது-பிள்ளையுறங்காவில்லிதாஸரை" என்று பணித்தாரும். "பாலேய்தமிழரென்கிறது—முதலாழ்வார்களை, இசைகாரரென்கிறது-திருப்பாணாழ்வாரை. பத்தரென்கிறது பெரியாழ்வாரை" என்று ஆளவந்தாரருளிச்செய்வர்.

(**1-6-1** பரிவதில்)

33. (புனைபூவே) "செந்துழாயிட்டுப் புனைக்கவமையும், கண்டகாலியிட வமையும்" என்று பட்டருளிச்செய்யும்படி. இத்தை பட்டருளிச்செய்தவாறே "ந கண்டகாரிகா புஷ்பம் தேவாய விநிவேதயேத்' என்னாநின்றதே" என்று நஞ்ஜீயர்கேட்க, "அவனுக்காகாது' என்கிறதல்ல. 'பறிக்கிற ஆச்ரிதன்கையிலே முட்பாயும் என்றதுக்காகத் தவிர்த்ததுகாணும்" என்றருளிச்செய்தார். "அப்ராக்ருத த்ரவ்யம்வேணும்" என்றிருந்தானாகில் ஸ்ரீவைகுண்டத்திலிராநின்றே "ஸ்ரீவராஹநாயனாருக்கு முத்தக்காசை யமுதுசெய்விப்பது" என்று கிடந்ததாய், "இதென்னமெய்ப்பாடுதான்!" என்று நஞ்ஜீயர் போர வித்தராயருளினார்.

1-6-6 அமுதமமரர்.)

34. (அமுதிலுமாற்றவினியன்) நம்பி திருவழுதி நாடுதாஸர், "இத்தேவஜாதி வெறும் மரையோ, 'உப்புச்சாறு கிளருவதெப்போதோ' என்று கவிழ்ந்து பார்த்துக் கிடப்பதே! இவனழகையும் போக்யதையையும் விட்டு" என்பராம்.

(**1-7 3**-ஆயர்கொழுந்தாய்)

35. (அவரால் புடையுண்ணும்) "மத்தாலேயோரடியடிப்பர்போலேகாணும்" என்று பட்டருளிச்செய்யும்படி.

(**1-7-4**-மயர்வற)

(அரும்பதவுரையில்.)

36. (என் சொல்லி யான் விடுவேனோ) என்கிற விடத்தில் ஓரைதிஹ்யம்-அதாவது, ஒரு ப்ராஹ்மணப்பிள்ளை மாமனார் க்ருஹத்துக்குப் போக அவன் தரித்திரனாகையாலே இவனையுங் கூட்டிக்கொண்டுபோய், நெடும்போது ஏற்ற மிறைக்க, மாப்பிள்ளைக்குக்

காலோய்ந்தவளவில், "விட்டுப்போகைக்கு ஹேதுவாக மாமனுக்கொரு கோபத்தை யுண்டாக்குவோம்" என்று, இறைக்கிற மாமனார் மேலே உச்சிஷ்டத்தை உமிழ; அவனும் "ஒரு குளிர்த்தியிருந்தபடியென்!" என்ன; "சுடச்சுடவுமிழ்வாரைத் தேடிக் கொள்" என்று இறங்கிப்போனானும்.

(1-7-7 யானொட்டி யென்னுள்.)

37. (பின்னையானொட்டுவேனோ) "எப்ரகாரத்தாலுமிரேன்" என்னுமாகில், பின்னை, நானவன்போக்கை யிசைவேனோ. என்னுடைய கர்மபாரதந்த்ரியப்போலே அவனுடைய ஆச்ரிதபாரதந்த்ரியத்துக்கு மேதேனும் கண்ணழிவுண்டோ; என்னிசைவின்றிக்கேயிருக்க, அவனாலே போகப்போமோ. அன்றியே, "நான் தொங்குவேனோ" என்று பிள்ளான் பணிக் கும்படி.

(1-8 ஓடும்புள் ப்ரவேசம்.)

38. (இத் திருவாய்மொழிதான்) "ஸர்வேச்வரனுடைய ஐச்வர்யத்தைச் சொல்லு கிறது" என்பாருமுண்டு; அன்றிக்கே, "ஈச்வரத்வலக்ஷணஞ் சொல்லுகிறது" என்பாரு முண்டு; அன்றிக்கே, 'கீழே 'பாடியிளைப்பிலம்' என்றார், அப்படியே பாடி யனுபவிக்கிறார்" என்பாருமுண்டு. "ஆர்ஜவகுணம் சொல்லுகிறது" என்று பட்டரருளிச்செய்யும் படி.

(1-9-6-மாயனென்னெஞ்சினுள்ளான்.)

(அரும்பதவுரையில்.)

39. (துயக்கன் மயக்கன்) பட்டர் திருவோலக்கத்துக்குப் பலகாலும் சாஸ்தி ரியாயிருப்பானொரு ப்ராஹ்மணன் சென்றுடி யிருப்பானாய் அவனைக்கண்டால் பட்டரும் "வந்தாயோ போனாயோ" என்று ஸாமான்யேந வ்யவஹரித்தருளிச்செய்வர்; ஒரு ஸ்ரீவைஷ்ணவர் பலகாலும் ஸேவிக்க எழுந்தருளுவர், அவரைக்கண்டால் மிகவும் க்ருபை பண்ணி ஆதரித்துக்கொண்டெழுந்தருளி யிருப்பர்; இத்தைப் பலகாலுங் கண்டிருப்பா ரொருவர் பட்டரை வந்து ஸேவித்து, "ஸ்வாமிந்! தேவரீர் திருவோலக்கத்துக்கு வருகிற சாஸ்திரி ப்ரஸித்தனாயிருக்கிறவன், அவன் வந்தால் ஸாமான்யமாக வ்யவஹரித்தருளு கிறது; ஒருஸாது ஸ்ரீவைஷ்ணவர் வந்தாரென்றால், அவரை மிகவும் ப்ரதிபத்தி பண்ணி யருளுகிறது; இதிரண்டையும் எனக்கு அருளிச் செய்யவேணும்" என்ன, "ஆனால் அவர்களிரண்டுபேரு மெப்போதும்போலே நாளையும் வருவர்கள், அப்போது நீயுமெப் போதும் போலே பார்த்திரு, இரண்டுஞ்சொல்லுகிறோம்" என்ன, அவருமப்படியே பார்த்திருக்க, மற்றைநாள் விடிவோறே அந்த ப்ராமணன் ப்ரதமம் வந்து ஸேவிக்க, அவனை யெப்போதும்போலே வினவியருளி, "நீர் ஆரைத்தான் பரதத்வமென்று நினைத் திருக்கிறது" என்ன, "சிறிது ப்ரமாணங்கள் ப்ரஹ்மாவை பரதத்வமென்று சொல்லுகிறது, சிறிது ப்ரமாணங்கள் விஷ்ணுவை பரதத்வமென்று சொல்லுகிறது; ஆகையினாலே நம்மாலே நிச்சயிக்கப்போமோ" என்ன, "நல்லது" என்றிருந்து, அவன் போனவாறே ஸ்ரீவைஷ்ணவரெழுந்தருளி ஸேவிக்க, அவரையும் க்ருபை செய்தருளி, "தேவரீர் ஆரைத் தான் பரதத்வமென்றிருப்பீர்" என்ன, "தேவரீர், ச்ரிய:பதி நாராயணனே பரதத்வம் என்றருளிச்செய்யுமே, அதொழிய அடியேன் வேறொன்றறியேன்" என்ன, "இன் னமும்மக்குத் தஞ்சமாக நினைத்திருப்பதேது" என்ன, "எம்பெருமானார் திருவடிகளே உபாயோபேயம்" என்று ப்ரஸாதித்தருளுமே, அத்தையே தஞ்சமாக நினைத்திருப்பன்" என்ன, திருவுள்ள முகந்து, "அபசாரத்தை க்ஷமித்தருள, திருமாளிகைக்கெழுந்தருள" என்றருளிச்செய்து, பார்த்திருந்தவரைப் பார்த்த, "கண்டீரோ யிருவர்க்கு முண்டான

தாரதம்மியம், ஆகையாலே, இவரைவணங்கவோ, அவனை வணங்கவோ ? இப்படியன்றோ ஸ்வரூப ஸ்திதி யிருந்தது " என்றருளிச்செய்ய, அவரும் க்ருதார்த்தராய்ப் போனாரென்று.

(1-9-7 தோளிணை மேலும்.)

40. (தோளிணையித்யாதி) பட்டர், "வீரராயிருப்பார் முற்பட ஆயுதத்துக்கிடுவர்கள், அப்படியே திருத்தோள்களுக் கிட்டான். ப்ரணயிகளாயிருப்பார் அனந்தர மபிமத விஷயத்துக்கிடுவர்கள். அப்படியே பெரியபிராட்டியார் எழுந்தருளியிருக்கிற கோயில் கட்டணத்துக்கும் கொடுத்தான்; ஆயுதத்துக்கு மபிமதவிஷயத்துக்குமிட்டால், பின்னைத் தாம்தாம் விநியோகங்கொள்ளுமித்தனையிறே; ஆகையாலே தான் சூடினான்; சேஷம் பின்னையடியாரிறே கைக்கொள்ளுவார், ஆகையாலே திருவடிகளுக்குச் சாத்தினான்; ஆபத்திக்குதவுவா ரடியாரிறே, தளர்ந்தும் முறிந்தும் சகட வசுரருடல் வேறுப்பிளந்து வீயப் பொருவா ரடியாரிறே; நம்முடைய வாபத்துக்களுக்குத் திருவடிகளே துணையானாப் போலே காணுமவனுடைய ஆபத்துக்களுக்கும் திருவடிகளே துணையானபடி" என்றருளிச்செய்வர்.

(1-10 பொருமாநீள். ப்ரவேசம்)

41. " கீழிற்றிருவாய்மொழியில் பிறந்த ஸர்வாங்க ஸம்ச்லேஷத்தை அநுஸந்தித்து நிர்வ்ருதராகிறார்." என்று முன்புள்ள முதலிகள் நிர்வஹிக்கும்படி. கீழிற்பிறந்த ஸர்வாங்க ஸம்ச்லேஷத்தை யநுஸந்தித்து பட்டருளிச் செய்வதோ ரேற்றமுண்டு. அதாவது.......... கீழில் திருவாய்மொழியில் உன்மஸ்தகமாகப் பிறந்த ஸம்ச்லேஷரஸத்தை அநுஸந்தித்து ....நிர்வ்ருதராகிறார் என்று. [மிக விரிவான ஸ்ரீஸூக்திகளை ஈட்டிலே ஸேவிப்பது.]

(1-10-2-கண்ணுள்ளே நிற்கும்)

42. (என்னினிவேண்டுவம்) வேல்வெட்டி நம்பியார், நம்பிள்ளையை, " பெருமாள் கடலை சரணம் புகுகிறவிடத்தில், ப்ராங்முகத்வாதி நியமங்களோடே சரணம் புக்காராயிருந்து, இவ்வுபாயம் இதர ஸாதனங்கள்போலே, சில நியமங்களை வேண்டியிருக்கிறதோ " என்று கேட்க, " பெருமாள் தமக்கு, 'ஸமுத்ரம் ராகவோ ராஜா சரணங் கந்துமர்ஹதி' என்றுபதேசித்தான் ஸ்ரீ விபீஷணாழ்வான் ; அவன்றான் பெருமாளை சரணம் புகுகிறவிடத்தில், கடலிலே ஒரு முழுக்கிட்டு வந்தான் ' என்றில்லை ; ஆக இத்தால் சொல்லிற்றாயிற்றென்னென்னில் ; பெருமாள் இக்ஷ்வாகுவம்ஸ்யராய் ஆசாரப்ரதான ராகையாலே சில நியமங்களோடே சரணம்புக்கார், ராக்ஷஸஜாதீயனாகையாலே, அவன் நின்ற நிலையிலே, சரணம் புக்கான், ஆகையாலே யோக்யனுக்கு அயோக்யதை ஸம்பாதிக்கவேண்டா ; அயோக்யனுக்கு யோக்யதை ஸம்பாதிக்க வேண்டா ; ஆனபின்பு ஸர்வாதிகார மிவ்வுபாயம் " என்றருளிச்செய்தார். .... *

இரண்டாம் பத்து

(2-1. வாயுந்திரை 7 தோற்றோம்.)

43. (தோற்றோமித்யாதி) கீழும் மேலும் போருகிறபடி யொழிய சப்தஸ்வாரஸ்யத்தைப்பற்ற எம்பெருமானாருளிச்செய்து போருவதொன்றுண்டு; அம்மங்கியம்மாளு மத்தையே நிர்ப்பந்தித்துப்போரும். அதாகிறதுதான், ஸ்ரீவாத்ஸ்யரா ரனேதர் கூடக் கட்டிக்

கொண்டு கூப்பிடாநிற்க, இருள்வந்து முகத்தை மறைக்க, அத்தைப்பார்த்து, ஆற்றாமைக்குப் போக்குவிட்டு தரிக்கவொட்டாதே நீ வந்து நலியக்கடவையோ வென்கிறாள்.

(**2-2** திண்ணன்வீடு—ப்ரவேசம்.)

44. "(மூவாமுதல்வா) என்று காரணத்வம் ப்ரஸ்துதமாகையாலே அந்த காரணத்வத்தை உபபாதிக்கிறார்" என்று பணிக்கும் பிள்ளான்.

(**2-2-3**-ஏறனைப்பூவனை.)

45. "ப்ரஹ்மாதிகள் எப்போதும் திருமேனியைப்பற்றி யிருப்பர்களோ" என்று நஞ்ஜீயர் பட்டரைக்கேட்க; "ஒரோராபத்துக்களிலே திருமேனியிலே யிடங்கொடுக்கிறான், அந்நீர்மையை விடமாட்டாமையாலே ஆழ்வார்க ளத்தையே வாய்புலற்றுகிறார்க ளத்தனை யிறே" என்று அருளிச்செய்தார்.

(**2-3-1**. ஊனில்வாழுயிரே.)

46. (தேனும்பாலு மித்யாதி) இதுக்காளவந்தார் அருளிச்செய்தாராகத் திருமாலையாண்டான் பணிக்கும்படி-"ஏகஜாதீய த்ரவ்யங்கள் தன்னிலே கலந்தாப்போலே" என்று. அதாவது-தேனும்தேனுங் கலந்தாப்போலவும், பாலும்பாலும் கலந்தாப்போலவும், நெய்யும் நெய்யும் கலந்தாப்போலவும், கன்னலும்கன்னலும் கலந்தாப்போலவும், அமுதும் அமுதும் கலந்தாப்போலவும் என்று. அங்ஙனன்றியே, எம்பெருமானார் அருளிச்செய்யும்படி—இவற்றை-ரஸவத்பதார்த்தங்களுக்கெல்லா முபலக்ஷணமாக்கி-"தானும் நானுமான கலவிக்குள்ளே யெல்லா ரஸங்களும் பிறக்கும்படி ஸம்ச்லேஷித்தோமென்கிறார்" என்று.

(**2-3-2**-ஒத்தார் மிக்காரை)

47. இப்பாட்டு ப்ரஸ்துதமான வளவிலே எம்பார் கோஷ்டியிலே "இவ்வாத்மாவுக்கு ப்ரதமகுருவார்" என்று பிறந்ததாய், இருந்த முதலிகளிற் சிலர் "ஆசார்யனன்றோ" என்றார்கள்; சிலர் "ஆசார்யன் ஸ்ரீ பாதத்திலே ஆச்ரயிக்கப்போரு என்று அழைத்துக்கொண்டு போய்ச் சேரவிட்ட ஸ்ரீவைஷ்ணவன் ப்ரதமகுரு" என்றார்கள்; "அங்ஙனன்றுகாண், அவனிவனையழைத்தாலும் இவன் அல்லேன் என்னுதபடி 'இசைவித்தென்னை' என்கிறபடியே அகவாயிலே யிருந்திசைவித்த ஸர்வேச்வரன்காண் ப்ரதமகுரு" என்றருளிச்செய்தார்.

(**2-3-3** அறியாக்காலத்துள்ளே.)

48. ஆளவந்தார் அருளிச்செய்ததாகத் திருமாலையாண்டான்பணிக்கும்படி-"அறிவுநடையாடாத தசையிலே ஸம்பந்தஜ்ஞானத்தைப் பிறப்பித்து, பிறந்த ஜ்ஞானத்தை அழிக்கக் கடவதான தேஹஸம்பந்தத்தோடே பின்னையும் வைத்தாய்' என்கிற இழவாலே சொல்லுகிறார்" என்றும். இத்தை எம்பெருமானார் கேட்டருளி, முன்னிற்பாட்டுக்களும் பின்னிற்பாட்டுக்களும் ப்ரீதியோடேநடவாநிற்க, நடுவே அப்ரீதி தோற்றச்சொல்லுமது சேராது, ஆனபின்பு இங்ஙனேயாமித்தனை—'அறியா மாமாயத்தடியேனை - அறியாக்காலத்துள்ளே அடிமைக்கணன்பு செய்வித்து வைத்தாயால்' என்கிறார்". என்றித்தையு மொரு உபகாரமாக்கி அருளிச்செய்தார்.

(**2-3-6** சேர்ந்தார் தீவினைகட்கு.)

49. (திண்மதியை) முன்பே சேர்ந்திருக்குமவர்களுக்குத் திண்ணியதான மதியைக் கொடுக்குமவனை. அம்பரீஷன் தபஸ்ஸு பண்ணாநிற்க, ஸர்வேச்வரன் இந்த்ரவேஷத்தை

தரித்துக்கொண்டு சென்று, "உனக்கு வேண்டியவற்றை வேண்டிக்கொள்" என்ன, "நான் உன்னையாராதிக்கு மவனல்லேன்காண் என்னை ஸமாதிபங்கம் பண்ணாதே போகவல்லையே, உன்னைக் கும்பிடுகிறேன்" என்றானிறே. (4-10-7ல் ஐதிஹ்யம் பார்ப்பது.)

(**2-4-1.** ஆடியாடி)

50. (மல்கி) மிக்கு. [கிமர்த்தம் தவ நேத்ராப்யாம் வாரி ஸ்ரவதி ஶோகஜம்] "ஆனந்தாச்ருவுக்கு யோக்யமான கண்களாலே ஶோகாச்ரு ப்ரவஹிக்கிறது ஆர்குடிவேர" என்று பட்டரருளிச் செய்யும்படி; அன்றிக்கே, பிள்ளான், "ஆரைச் சேதநராகக்கொண்டு" என்று பணிக்கும்.

51. (எங்கும் நாடிநாடி) "தன்கொய்சகமுட்படப் பாராநின்றாள்" என்று பட்டரருளிச் செய்யும்படி; அதுக்குக் கருத்து-"கண்ணனென்னெக்கலையானே" என்று அவனிருந்த ப்ரதேசமாகையாலே.

(**2-4-3** இரக்கமனத்தோடு.)

52. (அரக்குமெழுகும்) என்கிற விரண்டையும்-நெஞ்சுக்கொன்றும் இவள் தனக்கொன்றுமாக்கி நிர்வஹிப்பர், பிள்ளைதிருநறையூரரையர். நெஞ்சுமிவள்தனக்குக் கையடைப்பாகையாலே இவள்தனக்கே இரண்டையுமாக்கி யருளிச்செய்வர் பட்டர்; "விஷ்ணுநா ஸத்ருஶோ வீர்யே" என்கிறபடியே எல்லாமிவள் தன்படிக்கு த்ருஷ்டாந்தமாக வேண்டும்படியிறே இவள் தன்னிலை; அக்னிக்குள்ளே புகில் கரிந்துபோம், கடக்கவிருக்கில் வலிக்கும்; அக்னிஸகாஶத்திலே யுருகாநிற்குமிறே; முடிந்து பிழைக்கவும் பெறாதே தரித்திருக்கவும் பெறாதே நோவுபடும்படி பண்ணுவீரே!.

(**2-4-5** இவளிராப்பகல்.)

53. (தவளவண்ணர் தகவுகளே) "சுத்தஸ்வபாவரான வும்முடைய தகவுகளெங்கே போயிற்றின" என்றெம்பாரருளிச்செய்யும்படி. அன்றிக்கே, பட்டர், "உம்மைப்போலே நாலு ஶிஷ்டர்களமையுமிறே அபலைகள் குடிகெட" என்றார்.

(**2-5-1** அந்தாமத்தன்பு.)

54 (அந்தாமமித்யாதி) "அடியார்கள் குழாங்களையுடன் கூடுவதென்றுகொலோ' என்றிவராசைப்பட்டபடியே, நித்யஸூரிகளோடேவந்து கலந்தான்" என்று ஆளவந்தாரருளிச்செய்தாராகத் திருமாலையாண்டான் பணிக்கும்படி. ஆனால் அவர்களை "ஆழிநூலாரம்" என்றோ சொல்லுவதென்னில்; சின்மயராயிருக்கச்செய்தே பாரதந்த்ரிய ஸித்திக்காகத் தங்களை அமைத்துவைக்கிற வித்தனையிறே. அங்ஙனன்றிக்கே, எம்பெருமானார் அருளிச்செய்யும்படி "இவரோடு ஸம்ச்லேஷிப்பதற்குமுன்பு அவனோடொக்க இவையும் அநுஜ்ஜ்வலமாய் அஸத்ஸமமாய் இவரோடு கலந்தபின்பு உஜ்ஜ்வலமாய் ஸத்தைபெற்றபடி சொல்லுகிறது" என்று; கல்பகத்தரு வாடினால் அதில் பூவும் தளிரும் வாடுமிறே.

(**2-5-2** திருவுடம்பு வான்சுடர்)

55. (திருவுடம்புவான்சுடர்) "ஈச்வரனுக்கு விக்ரஹமில்லை, விபூதியில்லை' என்கிறவர்கள் முன்பே, ஆப்ததமரான இவர் 'திருவுடம்புவான்சுடர்' என்னப்பெறுவதே! ஈச்வரனுக்கு விக்ரஹமில்லை, குணமில்லை' என்கிறவர்கள் பண்ணிவைக்கமாட்டாத பாவமில்லை; அவர்களை அனுவர்த்தித்து அதுகேட்கவிராதபடி பெருமாள் நமக்குப் பண்ணின உபகாரமென்" என்றருளிச்செய்வர் ஜீயர்.

(**2-5-10** ஆணல்லன் பெண்ணல்லன்)

56. (ஆணல்லனித்யாதி) நாட்டிற்காண்கிற ஆண்களின்படியல்லன், அப்படியே ஸ்த்ரீகளின்படியுமல்லன், உபயோகயோக்ய மல்லாத நபும்ஸக பதார்த்தத்தின்படியுமல்லன். ....இப்படி பட்டர் அருளிச்செய்தவாறே, ஒரு தமிழன், "ஜீயா! நாட்டில் காண்கிற மூன்றின்படியுமல்லனாகில் சொல்லிற்றாகிறது வஸ்து சூன்யமோ பின்னை" என்றுகேட்க, பட்டரும், "பிள்ளாய்! இயலறிவுக்குப் போந்திருந்த தில்லையீ!, ஆணல்ல பெண்ணல்ல அல்லா அலியுமல்ல என்றதில்லையே, 'அல்லன், அல்லன்' என்கையாலே-'புருஷோத்தமன்' என்று சப்தந்தானே தோற்றுவிக்கிறதில்லையோ" என்றருளிச்செய்தார். "ஆணல்லன், பெண்ணல்லன்" என்கிறவித்தால்-ஸஜாதீய விஜாதீய நிஷேதம் பண்ணினபடி.

(**2-6** வைகுந்தா மணிவண்ணனே ப்ரவேஶம்.)

57. (இத்திருவாய்மொழி) "ப்ரணயிப்ரீத்யநுஸந்தானங்காணிது" என்று ஆளவந்தார் அருளிச்செய்யும்படி.

(**2-6-2**-சிக்கெனச் சிறிதோரிடமும்.)

58. (எங்கும்பக்கநோக்கறியான்) "பெரிய பிராட்டியார் திருமுலைத் தடத்தினாலே நெருக்கினாலுமவள் முகம் பாரான்." இங்கே ஆளவந்தார்க்கு குருகைகாவலப்பனருளிச்செய்ததாக அருளிச்செய்யும் வார்த்தை. "அப்பன் ஸ்ரீ பாதத்திலே ஒரு ரஹஸ்ய விசேஷமுண்டு" என்று மணக்கால்நம்பி யருளிச்செய்ய, "அதுகேட்க வேணும்" என்று ஆளவந்தாரு மெழுந்தருள கங்கைகொண்ட சோழபுரத்தேற, அப்பனுமங்கேயொரு குட்டிச் சுவரிலே யோகத்திலேயெழுந்தருளியிருக்க, "இவரை ஸமாதிபங்கம பண்ணவொண்ணாது" என்று சுவருக்குப் புறம்பே பின்னேநிற்க, அப்பனும் யோகத்திலே யெழுந்தருளியிருக்கிறவர் திரும்பிப்பார்த்து, "இங்குச் சொட்டைக்குலத்தி லாரேனும் வந்தாருண்டோ" என்று கேட்டருள "அடியேன்" என்று ஆளவந்தாரு மெழுந்தருளிவந்து கண்டு, "நாங்கள் பின்னே தெரியாதபடி நிற்க இங்ஙன் அருளிச்செய்கைக்கு ஹேதுவென்? என்ன, நானும் தானுமாக அநுபவியாநின்றால் பெரியபிராட்டியார் திருமுலைத்தடத்தாலே நெருக்கியணைத்தாலும் அவள்முகங்கூடப் பாராத ஸர்வேச்வரன் என்கழுத்தையமுக்கி நாலு மூன்று தரம் அங்கே எட்டிப்பார்த்தான்; இப்படி அவன் பார்க்கும்போது சொட்டைக்குடியிலே சிலர் வந்தாருண்டாகவேணும் என்றிருந்தேன் காணும் என்றருளிச்செய்தார்.

(**2-7** கேசவன்தமர் ப்ரவேஶம்)

59. எம்பார் இத்திருவாய்மொழி அருளிச்செய்யப்புக்கால், "ஸ்ரீவைஷ்ணவனானேனென்கிறார்" என்பாராம்; வைஷ்ணவத்வசின்னமிறே திருத்வாதஶநாமம். ஆழ்வாருடைய நெடுமாற்கடிமையும், எம்பெருமானுடைய நெடுமாற்கடிமையும் இரண்டாயிற்று நெடுமாற்கடிமை, அதில் எம்பெருமானுடைய நெடுமாற்கடிமை யித்திருவாய்மொழி.

(**2-7-4**- கோவிந்தன்)

60. (தேவும்) தேவுமென்கிறது-ஐச்வர்யத்தை. தன்னையென்கிறது-ஆச்ரிதபாரதந்திரியத்தை; அதிறே தானான தன்மை; .... பட்டர், "நீரானதன்மையாகிறது—ஆச்ரிதபரதந்த்ரராகை; உம்முடைய தம்பி சொன்னவார்த்தையை மறுத்து நீரானதன்மையை இழவாதே கொள்ளுமென்கிறான்" என்று.

(**2-7-5**-விட்டிலங்கு)

61. திருமாலையாண்டானோடே எம்பெருமானார் திருவாய்மொழி கேட்டருளுகிற நாளில், பாட்டுக்கள்தோறுஞ் சில்வார்த்தைகளையருளிச்செய்து "இது அர்த்தமானாலோ"

என்றால், "இது விச்வாமித்ரஸ்ருஷ்டி, ஆளவந்தார் அருளிச்செய்யக் கேட்டறியேன்" என்று பணிக்குமாம் ஆண்டான்; ஆண்டான் "இப்பாட்டுக்கு விச்வாமித்ர ஸ்ருஷ்டி வேண்டாவாயிருந்ததீ" என்ன, இப்பாட்டால்—தன் அவயவ ஸௌந்தரியத்தாலே என்னைத் தனக் காக்கினான் என்கிறார்" என்றருளிச்செய்தருளினாராம். அதுவுங்கிடக்க, பட்டருளிச் செய்வதொன்றுண்டு "ஆழ்வாரையு மாழ்வார் பரிகரத்தையும் விஷயீகரித்த, அத்தாலே திருமேனியிற்பிறந்த ஔஜ்வல்யத்தைச் சொல்லுகிறது" என்று.

(**2-7-9** சீர்இதரன்)

62. (இராப்பகலித்யாதி) இவர் "பக்திபரவசராகையாலே இவருடைய தேஹயாத்திரையிருக்கும்படி" என்று முன்புள்ள முதலிகள் நிர்வஹிக்கும்படி. அன்றிக்கே, பட்டர் "மரீஇய தீவினை மாளவென்கிறவிடத்தளவும்—*ஆடியாடியி லிவர்க்கோடின தசையாய், இன்பம் வளரவென்கிற வித*-அந்தாமத்தன்புதொடங்கிக் கேசவன்தமரளவும் வரவுண்டானயைச் சொல்லுகிறது" என்று.

(**2-8** அணைவதரவணை. ப்ரவேசம்)

63. இத்திருவாய்மொழிதன்னை—"ஈச்வரத்வஞ் சொல்லுகிறது" என்று நிர்வஹிப்பாருமுண்டு; "மோக்ஷப்ரதத்வஞ் சொல்லுகிறது" என்று பட்டருளிச்செய்யும்படி. இவை தான் ஒன்றை ஒன்றுவிட்டிராது, ஈச்வரனாயிற்று மோக்ஷப்ரதனுமவன்; மோக்ஷப்ரதனும்போது ஈச்வரனாகவேணும்.

(**2-9** எம்மாவீடு. ப்ரவேஶம்)

64. எம்பார் இத்திருவாய்மொழி யருளிச்செய்யப் புக்கால், இருந்தவர்களை "யார்" என்று கேட்டுக் கதவுகளையு மடைப்பித்து குஹ்யமாகவாமருளிச் செய்வது.

(**2-9-1** எம்மாவீடு)

65. (எம்மாவீட்டுத்திறமும்செப்பம்) ஒரு தமிழன் "எம்மாவீட்டுவிகல்பமும் செவ்வியவாம்" என்றான். அந்த பக்ஷத்திலே, வீட்டுவிகல்பமாவது—ஸாலோக்ய ஸாரூப்ய ஸாமீப்ய ஸாயுஜ்யமென்றவை. செவ்வியவாகையாவது — ஸாலோக்யாதிகளெல்லாம் இம்மோக்ஷத்திலே யுண்டாகை.

(**2-9-2** ஈதேயானுன்னை.)

66. (ஞானக்கைதா) இங்கே எம்பார்க்கு ஆண்டான் அருளிச்செய்த வார்த்தையை ஸ்மரிப்பது. அதாவது, "ஒரு கிணற்றிலே விழுந்தவனுக்கிரண்டுபேர் கைகொடுத்தால், எடுக்குமவர்களுக்கு மெளிதாய் ஏறுமவனுக்கு மெளிதாயிருக்குமிறே; அப்படியே யாகிறது" என்று.

(**2-9-4** எனக்கேயாட்செய்)

67. (தனக்கேயாக வெனைக்கொள்ளுமீதே என்று ப்ரார்த்திப்பானேன்? திருவுள்ளமானபடி செய்கிறான் என்றிராதே" என்று பிள்ளை திருநறையூரரையர் எம்பாரைக்கேட்க; அதுகேளீர்; முன்பு பிரிந்தன்று, பின்பு பிரிவுக்கு ப்ரஸங்கமுண்டாயன்று, இரண்டுமின்றியிருக்க திருமார்விலேயிருக்கச்செய்தே, "அகலகில்லேன், அகலகில்லேன்" என்னப்பண்ணுகிறது விஷயஸ்வபாவமிறே; அப்படியே ப்ராப்யருசி ப்ரார்த்திக்கப் பண்ணுகிறது" என்றருளிச்செய்தார்.

(**2-9-8** எக்காலத்தெந்தையாய்)

68. (எக்காலமித்யாதி) இதுக்கு ஆளவந்தார் அருளிச்செய்யும்படி—"இனிக்கூறிட வொண்ணாதபடி சிறுகூறான அத்யல்ப காலத்திலும், நீ ஸ்வாமியான முறைதப்பாதபடி என்

ஹ்ருதயத்திலேவந்து புகுரப்பெறில், மற்றெக்காலத்திலும்-இதொழிந்த எல்லாக் காலத்திலும், யாதொன்றும் வேண்டேன், பின்னையிதுதானும் வேண்டேன். ....இத்தை எம்பெருமானார் கேட்டருளி "இதுபொருள் அழகியது, இவ்வாழ்வாருடைய ப்ரக்ருதிக்குச் சேராது, பெறினும் பெறுதொழியினும் சிறுகக்கோலமாட்டார்; இங்ஙனேயாகவேணும் என்றருளிச் செய்வர் (ஈடு ஸேவிக்க.)

(**2-10** கிளரொளியிளமை—ப்ரவேசம்.)

69. கீழ் * எம்மாவீட்டிலே நிஷ்கர்ஷித்த ப்ராப்யம் பெறுகைக்குத் திருமலையை யாச்ரயிக்கிறுரென்று ஆளவந்தாரருளிச் செய்தாராகத் திருமாலையாண்டான் பணிக்கும்படி எம்பெருமானர்..............(ஈடு ஸேவிக்க.)

(**2-10-4** கருமவன் பாசம்.)

70. [கருமவன்பாசம் கழித்துழன்றுய்யவே.] "இது நம்மாற்செய்து தலைக்கட்டப் போமோ திருமலையை ஆச்ரயிக்குமதொழிய" என்றிங்ஙனே ஆழ்வான் ஒருருவிலே பணித்தானும். அங்ஙனும் நிர்வஹிக்கக் கடவது. அன்றிக்கே, கருமவன்பாசம் கழிக்கைக்காகவும் உழன்றுய்கைக்காகவும் என்றிங்ஙனே எம்பெருமானர் அருளிச் செய்யும்படி.

(**2-10-7** நலமென நினைமின்).

71. (மலமறுமதிசேர்.) சந்த்ரபதத்துக்கவ்வருகே வளர்ந்து நிற்கையாலே, அவன் போம்போது சிகரங்களிலே தேய்ப்புண்டு சாணையிலேயிட்டாப்போலே களங்கமறுநிற்குமென்னுதல்; அன்றிக்கே, திருமலையாழ்வார்தாம் ஜ்ஞாந லாபத்தையுண்டாக்குவர் என்று பிள்ளரன் வார்த்தை.

(**2-10-8** வலஞ்சேய்துவைகல்.)

72. பிள்ளை திருநறையூரரையரும் பட்டரும் ப்ரதக்ஷிணம் பண்ணுநிற்க, பின்னே ஸேவித்துக்கொண்டுபோனேன்; அல்லாதார் கடுங்குதிரைபோலே வாராநிற்க, இவர்கள் திருக்கோபுரங்களையும் திருமாளிகைகளையும் கண்ணாலே பருகுவாரைப்போலே பார்த்துக்கொண்டுவந்தார்கள் என்று நஞ்சீயர் அருளிச்செய்வர். ... ... *

மூன்றும்பத்து.

(**3-1-7** வாழ்த்துவார் பலராக.)

73. (வாழ்த்துவார் பலராக) 'ஆனல் தான் வந்ததென்? வேதங்களில் அவர்கள் செய்த ஏற்றம் என்?' என்றும் பட்டர் அருளிச்செய்வது. அன்றிக்கே வாழ்த்துவார் பலருண்டாகைக்காக என்னுதல்.

(**3-1-8** மாசூணச் சுடருடம்பாய்.)

74 கீழ்ப்பாட்டில், ருத்ரன் தொடக்கமானர் ஏத்தமாட்டார்களென்றதாய், இப்பாட்டில் 'அவன் தனக்குங்கூட ஜநகனை ப்ரஹ்மா ஸ்தோத்ரம் பண்ணினல் அதுவும் உனக்கு அவத்யமாம்' என்பாருமுண்டு. அவனையும் கீழ்ப்பாட்டிலே சொல்லிற்றாய், இதில் உபய பாவனையுமுடைய இவனைப் போலன்றியே கேவலம் பரஹ்ம பாவனையையா யிருப்பானொரு ப்ரஹ்மாவை உத்ப்ரேக்ஷித்து, அவன் ஏத்தினலும் தேவர்க்கு அவத்யமாமித்தனையன்றோ? என்கிறார்' என்று பட்டர் அருளிச்செய்யும்படி.

(3-1-9 மழுங்காதவைந்நுதிய)

75. 'மறையாதே' என்ற இதுக்கு 'மறையும் மறையும்' என்று சிற்றுட்கொண்டான் வார்த்தை.

(3-2 முந்நீர்ஞாலம்—ப்ரவேசம்)

76. பட்டர் திருக்கோட்டியூரிலே எழுந்தருளியிருக்கச்செய்தே, சீராமப்பிள்ளை 'இவர் பரத்வாநுபவத்தை யாசைப்பட்டு, அது ஒரு தேச விசேஷத்திலேபோனால் அநுபவிக்குமதாய் நோவுபடுகிறாரல்லர்; அவதாரங்களில் அநுபவிக்க ஆசைப்பட்டு, 'பிற்பாடரானேம்' என்று நோவுபடுகிறாரல்லர்; உகந்தருளின நிலங்களிலேயாய், அது தன்னிலும் திருமலையிலேயாகில் அநுபவிக்க இழிந்தது, பின்னை மேன்மேலென அநுபவிக்குமதொழிய இவர் இழந்து நோவுபடுகைக்குக் காரணமென்?' என்று கேட்க, 'பரவ்யூஹவிபவங்களோடு அர்ச்சாவதாரத்தோடு வாசியற தர்மியைக்யத்தாலே விஷயம் எங்குமொக்கப் பூர்ணமாயிருக்கும். குறைந்து தோற்றுகிறவிடம் ப்ரதிபத்தாக்களுடைய ப்ரதிபத்தி தோஷத்தாலே.................. இத்யாதி ஈடு ஸேவிக்க.

(3-2-1. முந்நீர் ஞாலம்.)

77. (ஆக்கையின் வழியுழல்வேன்) நீ ஒன்றை நினைத்துத் தந்தாய்; நான் அதின் வழியே போந்தேன். 'தெப்பத்தை நூக்கிப்போய்ப் பெருமாளை யநுபவிக்கலாயிருக்க, 'சரீரம் பாங்கன்று' என்று நீர் வாக்காலே போய்க் கடலிலே புகுவாரைப் போலே, 'இதர விஷயப்ராவண்யத்துக்கு உடலாக்கி அநர்த்தத்தை விளைத்துக்கொண்டேன்' என்றார் எம்பார்.

(இனி வந்து கூடுவனே) 'இனிவந்து கிட்டுகையென்று ஒருபொருளுண்டோ வென்று நிராசராகிறார்' என்று முன்புள்ள முதலிகள்; எம்பெருமானார் 'நிராசரானால் பின்னை முடிவாரொருவர்; ஒன்பதாம் பாட்டில் நிராசராக, பத்தாம் பாட்டில் அவன் வந்து ஸமாதாநம் பண்ணினாக அமையும்' என்று அருளிச்செய்வர்.

(3-2-8. மேவுதுன்பவினைகளை.)

78 "ஓவுதலின்றி மேவுதுன்ப வினைகளை விடுத்துமிலேன்; ஓவுதலின்றி உன்கழல் வணங்கிற்றிலேன்" என்று எம்பார் அருளிச்செய்யும்படி. 'சண்ணலைப் பெண்டாட்டிக்கு உண்ண அவஸரமில்லை' என்னுமாபோலே இந்த்ரியங்களுக்கு இரையிட்டுத் திரிந்தேனித்தனை; எனக்கொன்றும் ஹிதம்பார்த்திலேன்: [ஓவுதலின்றி என்பதற்கு ஓய்வில்லாமையினாலே யென்று எம்பார் திருவுள்ளம்பற்றின பொருள்.]

(3-2-10. தலைப்பெய் காலம்.)

79. [அலைப்பூணுண்ணும்] 'அவ்வல்லல்' என்னுமித்தனை. த்ருஷ்டாந்தமில்லை. அதெல்லாம் காணக்காண விட்டுக் கடக்க நிற்க, 'அத்தோடு ஸஜாதீயமான அல்லல்' என்று எம்பார் அருளிச்செய்வது; அவ்வோபாதி க்லேசம் போருமாயிற்று பகவத் விச்லேஷத்தால் வருமது, இவர்க்கு. அன்றிக்கே, 'பகவதலாபமேயான பின்பு யமவச்யதையும் வந்ததே யன்றோ? என்று அந்த யமவச்யதை போம்படியாக' என்று ஆண்டான் நிர்வஹிக்கும்படி.

(3-3-1. ஒழிவில் காலம்.)

80. ஆழ்வார் திருவரங்கப்பெருமாளரையர் இத்திருவாய்மொழி பாடப்புக்கால், "ஒழிவில் காலமெல்லாம், காலமெல்லாம், காலமெல்லாம்" என்று இங்ஙனே நெடும்போதெல்லாம் பாடி, மேல்போக மாட்டாதே அவ்வளவிலே தலைக்கட்டிப் போவராம்.

(3-3-4. ஈசன் வானவர்க்கு.)

81. (நீசனேன் நிறைவொன்று மிலேன்) நீசத்வத்தையும் நிறையில்லாமையையுங் கூட்டி இங்ஙனே ஆழ்வாராகப் பண்ணிற்று என்கிறாராயிற்று. (அமர்யாத:)..........' இது ஆளவந்தார் அருளிச் செய்ததேயாகிலும், நான் என் வாயால் இப் பாசுரம் சொல்ல மாட்டேன்.' என்னுமாம் அனந்தாழ்வான்.

(நீசனேன் நிறைவொன்றுமிலேன்—) அநாத்ம குணமே என் பக்கலிலே யுள்ளது ஆத்ம குணங்களொன்றுமில்லை 'என் தண்மையும் நிறைவில்லாமையுமிறே நான் இவ் வார்த்தை சொல்லிற்று என்கிறார்' என்பராம் பிள்ளை திருநறையூரரையர்.

[என் கண் பாசம் வைத்த] என் பக்கலிலே பாசத்தை வைத்த. நித்யஸூரிகளுக்கு ஈசனாயிருந்தான். என் பக்கலிலே ஸங்கத்தைப் பண்ணினான். அவர்கள் ஸத்தை யுண்டாகைக்காக அவர்களோடே கலந்தான். தன் ஸத்தை பெறுகைக்காக என்னோடே வந்து கலந்தான். ப்ராதப்யத்துக்கும் பழிக்கும் செங்கல் சீரைக்கும் ஜீவநம் வைப்பாரோபாதி அவர்கள் பக்கல்; நெஞ்சும் உடம்பும் தந்தது எனக்கு என்கிறார். அன்றியே, "எனக்குத் தன் பக்கலிலே ஸங்கமுண்டாம்படி பண்ணினான்' என்று நிர்வஹிப்பாருமுண்டு" என்று அருளிச்செய்வர்.

(3-3-6. வேங்கடங்கள்.)

82. (மெய்ம்மேல் வினை முற்றவும்) ப்ரக்ருதி ஸம்பந்த நிபந்தனமாக வரக்கடவ பாபங்களைச் சொல்லுகிறது. ஆக, 'கடன்கள் பெய்ம்மேல் வினை முற்றவும், வேம்—நசிக்கும்' என்று இங்ஙனே ஆளவந்தார் அருளிச்செய்யும்படி. இத்தை எம்பெருமானார் கேட்டருளி, 'இதுக்கு வேதாந்தத்திற் சொல்லுகிற கட்டளையிலே பொருளாக அமையாதோ?' என்று இங்ஙனே அருளிச்செய்வர். அதாவது *உத்தர பூர்வாக யோரச்லேஷ விநாசௌ* என்றும், *ஏவம் ஹாஸ்ய ஸர்வே பாப் மாந: ப்ரதூயந்தே* என்றும் சொல்லுகிறபடியே.

....

இவ்விடத்திலே பட்டர் ஒரு இதிஹாஸம் அருளிச் செய்வர்; 'பண்டு, தலையில் மயிரின்றிக்கே யிருப்பானொருவன் நெல் பரிமாறா நின்றானாய், அங்கே ஒருவன் சென்று 'மயிரைப்பேணாதே நீர் தனியே நின்று பரிமாறா நின்றீர்' என்ன, 'ஏன் தான் நடந்ததீ! என்ன, 'ஒன்றுமில்லை; கண்டுபோக வந்தேன்' என்ன, 'ஆகில் ஒரு கோட்டையைக் கொண்டுபோகலாகாதோ?' என்று எடுத்துவிட, அவன் அத்தைக்கொண்டு வாரா நிற்கச் செய்தே எதிரே ஒருவன் வந்து 'இது எங்கே பெற்றது?' என்ன, 'உன்தனை மொட்டைத் தலையன் தந்தான்' என்றானாய், அவன் அத்தைச் சென்று அங்கே 'இன்னான் உம்மை வைதுபோகா நின்றானீ!' என்ன, 'அடா! என் நெல்லையுங் கொண்டு என்னையும் வைது போவதே?' என்று தொடர்ந்து வந்தானாய், அவன் புரிந்து பார்த்து 'ஏன்தான்! குழல்கள் அலையவலைய ஓடிவாரா நின்றதீ!' என்ன, 'ஒன்றுமில்லை, இன்னம் ஒரு கோட்டை கொண்டுபோகச் சொல்ல வந்தேன்' என்றானும். அப்படியே கடலை முகங்காட்டுவித்துக் கொள்ளுகைக்காகக் காலைப்பிடிப்பது கோலைத்தொடுப்பதாகா நிற்க, அவன் வந்து முகங் காட்டினவாறே, 'உனக்கு அம்பு தொடுத்தோம்' என்ன லஜ்ஜித்து, 'உன் விரோதிகளைச் சொல்லு, நாம் இத்தை விட' என்றாரிறே.

....

(தாங்கள் இத்யாதி)... அதிகாரி வைலக்ஷண்யமும் வ்ருத்தி வைலக்ஷண்யமும் தோன்றும்படி 'தாங்கள் தங்கட்கு' என்று இங்ஙனே ஊன்றிச் சொல்லுமாம் அனந்தாழ்வான்.

(**3-3-7.** சுமந்து மாமலர்.)

83. [சுமந்து இத்யாதி]... 'ஸ்ரீ புருஷோத்தம முடையானுக்கு ராஜபுத்ரன் செண்பகப் பூக்கொண்டு சாத்தினபடியை நினைப்பது. அதாவது-ஸ்ரீபுருஷோத்தமமுடையான் செண்பகம் உகந்து சாத்துவர்; சில ராஜ புத்ரர்கள் செண்பகங்கொண்டு சாத்தத் தேடி, முன்பே பூவெல்லாம் விற்றுப்போய் ஒரு பூ இருந்தது கடையிலே; அப்பூவுக்குச் செருக்காலே ஒருவர்க்கொருவர் த்ரவ்யத்தைப் போர ஏற்றி இவர்களில் ஒருவன் நினைக்க வொண்ணாதபடி த்ரவ்யத்தைப் போர இட்டுக்கொண்டு வந்து சாத்தினன்; அன்று இரா ஸ்வப்நம் காண்கிறான்; 'நீ யிட்ட பூ எனக்குக் கனத்துச் சுமக்க வொண்கிறதில்லை' என்று அருளிச்செய்தார்.

(**3-4-2.** கூவுமாறறிய மாட்டேன்.)

84. "பெரும்புறக்கடல்" என்கிற திருமொழி—நிர்வஹிக்கிற க்ரமத்திலே குன்றங்களனைத்தும் என்றது. "நின்ற குன்றத்தினை நோக்கி" என்னுமாபோலே வடிவுக்குப் போலியாய், 'மேவுசீர் மாரி' யென்று மேகத்தைச் சொன்னவிடம் திருநிறத்துக்குப் போலியாயிருக்கிறது என்று நிர்வஹிப்பாருமுண்டு.

(**3-4-4.** சாதிமாணிக்க மேன்கோ.) (அவதாரிகை)

85. நம் முதலிகளிலே ஒருவரை ஒருவன் 'எனக்கு எம்பெருமானை நினைக்க விரகு சொல்லவேணும்' என்ன, 'நான் உனக்கு அது சொல்லுகிறேன்; நீ எனக்கு அவனை மறக்க ஒரு விரகு சொல்ல வல்லையே?' என்றாராம். அதுக்குக் கருத்து.......இத்யாதி ஈடு ஸேவிக்க.

... ...

(ஆதுமில் இத்யாதி).... 'நாமரூபங்களையுடையனவாய் வஸ்துவாகச் சொல்லலாம்படி பிரிய நின்றபோதும் இவற்றோடே கலந்து இவற்றின் தோஷம் தன் பக்கல் தட்டாதபடி நிற்கும்; இவை 'தான்' என்கிற சொல்லுக்குள்ளே யாப்படி கலந்து நின்ற போதும் தத்கத தோஷாஸம்ஸ்ப்ருஷ்டனாயிருக்கும் என்றதாகிறது' என்று அருளிச் செய்வர். அதுக்கு அடி ப்ரவேச ஹேது விசேஷம்.

(**3-4-6.** பாலேன்கோ.)

86. (மால் என்கோ) ஆச்ரித விஷயத்தில் வ்யாமுக்தனென்பேனோ? இப் பாசுரத்தைச் சொல்லா, * இதம் தே நாதபஸ்காய * என்னும் வ்யாமுக்த னென்பேனோ?' "* இதம் து தே குஹ்யதமம் ப்ரவக்ஷ்யாமி * என்ற வோபாதி, * இதம் தே நாதபஸ்காய * என்றதும் முன்னே சொல்லிக்கொள்ளவிறே அடுப்பது; அங்ஙனன்றிக்கே, முந்துறச் சொல்லி, பின்னை * இதம் தே நாதபஸ்காய * என்றானிறே; இதுதனக்கு அடியென்?" என்று ஜீயர் பட்டரைக் கேட்க, "த்ரௌபதி குழலை விரித்துக் கிடக்கையாலே அது முடிக்கைக்காக, செய்வதறியாமையாலே மூலையில் கிடந்தாரை முற்றத்தே யிட்டான்; பின்னை அர்த்தத்தின் சீர்மையை அநுஸந்தியா, 'ஆர் அதிகாரிகளாகச் சொன்னோம்? கைப்பட்ட மாணிக்கத்தைக் கடலிலே யிட்டோம்' என்று பதண் பதண் என்றான் காணும்" என்று அருளிச் செய்தார்.

(**3-4-10** யாவையும் யவருந்தானாய்.)

87. (ஆவிசேர் இத்யாதி.) ஆவியுண்டு-ப்ராணாச்ரயமான சரீரம்; அத்தோடு சேர்ந்திருந்துள்ள உயிருண்டு ஆத்மா; அதின் பக்கல் அந்த சரீரகதமான பால்யயௌவநாதிகளொன்றாலும் ஒரு ஸம்பந்தமுமில்லையாம்படியாக அநுஸந்திக்கிற அநுஸந்தானமானது அந்த ஆத்மாவுக்குக் கூடாநின்றபின்பு, அப்பொருள் அவனையுங்கூடத் தட்டில்லை. இங்ஙனன்றிக்கே, 'இதுக்கு வேறேயும் இரண்டுபொருள் சொல்லுவர்கள்' என்று அருளிச்செய்வர்:— அவன் பக்கலிலே பக்தியுண்டாகில் அவனைக் கிட்டலாமென்றும்; புறம்புண்டான உபாயாந்தரங்களிலுண்டான பற்றடையவிட்டு, அவனையே பற்றில் அவனைக் கிட்டலாமென்றும். அன்றியே, அந்திம ப்ரத்யயம் உண்டாமாகில் அவனைக்கூடலாமென்றுமாம். இத்தை எம்பெருமானார் கேட்டருளி, கீழ் வ்யாப்தியைச் சொல்லி நின்றபின்பு, இனி வ்யாப்யவஸ்துகதமான தோஷங்கள் வ்யாபகனானவனுக்குத் தட்டாதென்னுமிடம் அவச்யம் சொல்லவேணும்; ஆனபின்பு, இத்தையே சொல்லிற்றாக அமையும்' என்று அருளிச்செய்வர்.

(**3-5-1**. மொய்ம்மாம்பூம்பொழில்.)

88. [எம்மானை] ஆனைக்கு உதவின அத்தாலே அதன் சிறை விட்டது, அந்நீர்மையிலே தாம் சிறைப்பட்டார். ஒரு ஜந்மமாதல், ஒரு ஜ்ஞாநமாதல், ஒரு வ்ருத்தமாதல் ஒன்றுமின்றிக்கே ருசிமாத்ரமேயான ஸ்ரீ கஜேந்த்ராழ்வானுக்கு உதவினபடியை அநுஸந்தித்து, 'இது என்ன நீர்மை?' என்று அதிலேயாயிற்று இவர் அநந்யார்ஹராயிற்று. பட்டர் இவ்விடத்தை அருளிச் செய்யா நிற்கச்செய்தே மேலேயும் இயலைச் சொல்லப் பண்ணி "அவன் நூறாயிரஞ்செய்தாலும் விக்ருதராகாதிருக்குப்போதும் நாமே வேணும்; நமக்கு ஒரு ஆபத்து உண்டானால் இருந்தவிடத்திலே இருக்கமாட்டாதே விக்ருதனும் போதும் அவனே வேணும்" என்று அருளிச்செய்தார்.

(**3-5-4**. வம்பவிழ்கோதை.)

89. [தம் பிறப்பால் இத்யாதி]... வைஷ்ணவர்கள் நடுவே இவர்கள் சரீர பரிக்ரஹம் பண்ணிற்று என்ன ப்ரயோஜநத்துக்காக? 'திருப்புன்னைக் கீழே ஒருவர் இருக்குமிடத்திலே நம் முதலிகள் பத்துப்பேர் கூட நெருக்கிக் கொண்டிருக்கச் செய்தே, க்ராமணிகள், பயிரெழுந்த பிசல்களும், பெரிய வடிவுகளும், மேலே சுற்றின இரட்டைகளுமாய் இடையிலே புகுந்து நெருக்குமாபோலே காண்' என்று பிள்ளைப் பிள்ளை.

(**3-5-5**. சாது சனத்தை நலியும்.)

90. [அங்கு வைத்து இங்குப் பிறந்த].........இப்படி பிறவா நின்றாலும், * நைஷ கர்ப்பத்வமாபேதே ந யோந்யா மவஸத் ப்ரபு:* என்கிறபடியே கர்ப்பத்தில் அந்வயமில்லை. 'இதுதான் கூடுமோ?' என்னவொண்ணாதிறே; இக்ஷ்வாகு வம்சத்திலே யுவநாச்வன் என்பானொருவன் மந்த்ரபூதமான ஜலத்தைப் பாநம் பண்ண, அவன் வயிற்றிலே கர்ப்பமுண்டாயிற்றிறே ஒரு சக்தி விசேஷத்தாலே; மிதுநமாய் ஸம்ச்லேஷித்துப் பிறந்தமையில்லையிறே அங்கு; அப்படியே யிங்கும் ஸர்வசக்தி யோகத்தாலே இவ்வர்த்தம் உபபந்நமாகத் தட்டில்லையிறே.

(வீதிகள் தோறும் துள்ளாதார்) மிளகாழ்வான் வார்த்தையை நினைப்பது. [மேலே 3-5-8ல் இதன் விவரணம் கண்டுகொள்வது.]

....

கீழில் திருவாய்மொழியிலே ததீயத்வாகாரத்தாலே இவ்விபூதியாக உத்தேச்யமென்று அநுபவித்தார்; இத்திருவாய்மொழியிலே இவ்விபூதி தன்னிலே 'எண்ணாத மானி

டத்தை எண்ணுதபோதெல்லாமினியவாறே' என்றும், 'பேராளன்பேரோதும் பெரியோரை யொருகாலும் பிரிகிலேனே' என்றும் சொல்லுகிறபடியே சிலரைக் கழித்துச் சிலரைக் கூட்டிக்கொள்ளா நின்றுர்; இங்குச்செய்ததாகிறது என்? என்னில்; இவ்வாகாரமும் கிடக்கச் செய்தே, கீழ் உபாதேய மென்று அநுஸந்தித்தார் ததீயத்வாகாரமே தோற்றி, ஆகாராந்தரம் தோற்றுதபடியான பாகம் பிறந்தவாறே. 'இவர் தாம் எல்லார் படிகளு முடையராயிறே இருப்பது, முக்தர் படியையுடையரென்னுமிடம் சொல்லிற்று கீழ்த்திரு வாய்மொழியாலே; முமுக்ஷுக்கள் படியையுடைய ரென்னுமிடம் சொல்லிற்று, இத் திருவாய்மொழியாலே' என்று அருளிச்செய்வர்.

(3-5-6. மனிசரும் மற்றும் முற்றுமாய்.

91. [முனிவின்றி யேத்திக் குனிப்பார்] முனிவின்றி பகவத் குணங்களைக் கேட்டால் அஸூயை பண்ணுதே ஏத்துமவர்கள்... ......அன்றிக்கே, 'முனிவாகிறது முநித்வமாய், அதின்றிக்கே யொழிகையாவது கலங்குகையாய், அடைவுகெட்டு ஏத்திக் குனிப்பாரென் னவுமாம்' என்று அருளிச்செய்வர்.

(3-5-7. நீர்மையில் நூற்றுவர் வீய.)

92, (உத்தமர்கட்கு என் செய்வாரே).... ஆயிரத்தளியிலே ராஜா இருக்கச் செய்தே பெரிய நம்பியையும் ஆழ்வானையும் நலிந்தானாய், ஆழ்வான் படியிலே சாய்ந்துகிடக்கச் செய்தே பெரியநம்பி திருநாட்டுக்கு எழுந்தருளினர்; அவ்வளவிலே 'ஒருவருமில்லாதாரை ப்ரதிபத்தி பண்ணக் கடவோம்' என்று திரிகிறுர் சிலர் அங்கே வந்து ஆழ்வானைக் கண்டு 'ஒருவனுண்டிறே' என்று போகப்புக, ஒருவரையும் ஒரு குறை சொல்லியறியாதவன், 'வாரீகோள் மாணிகாள்! வைஷ்ணவனுமாய் ஒருவனுமில்லாதா னொருவனைத் தேடி ப்ரதி பத்தி பண்ண இருக்கிறீகோளோ நீங்கள்? ஈச்வரனும் ஈச்வர விபூதியும் வைஷ்ணவனுக்குக் கிஞ்சித் கரிக்கவிருக்க, வைஷ்ணவனுமாய் அறவையுமாயிருப்பானொருவனை நீங்கள் எங்கே தேடுவிகோள்?' என்றுனும். [ப்ரதிபத்தி பண்ணுகையாவது—ஸத்காரம் செய்கை.]

(3-5-8. வார்புனலந்தணருவி.)

93. (பிறர் கூற) வைஷ்ணவர்களங்கீகாரம் பெறுமதிலும் அவைஷ்ணவர்கள் 'இவன் நமக்கு உடலல்லன்' என்று கைவிடுகைதான் உத்தேச்யமாயிருக்குமிறே: ராவணன் *த்வாம் து திக் குலபாம்ஸநம்* என்றதுதன்னை உத்தேச்யமாக நினைத்தா னிறே விபீஷணுழ்வான்; மிளகாழ்வான் வார்த்தை—ராஜா அகரம் வைக்கிறுனாய் அங்கே செல்ல, 'உமக்குப் பங்கில்லை' என்ன, 'அது என்? வேத பரீக்ஷை வேணுமாகில் அத்தைச்செய்வது, சாஸ்த்ர பரீக்ஷை வேணுமாகில் அத்தைப் பரீக்ஷிப்பது' என்ன, 'உமக்கு அவையெல்லாம் போதும்; அதுக்கு உர்மைச் சொல்லவொண்ணுது' என்ன, 'ஆனுல் எனக்குக் குறையென்?' என்ன, நீர் வைஷ்ணவரன்றே; ஆகையாலே காண்' என்ன, புடவையை முடிந்து எறிட்டுக் கூத்தாடினுனாயிற்று, தன்னை அவர்கள் கைவிட் டதுக்கு.

(3-6-6. தோற்றக்கேடவையில்லவன்.)

94 (அடிக்கீழ்ப்புகநின்ற செங்கண்மால்) 'ஹிரண்யன் பக்கல் சீற்றமும் செல்லாநிற்க, ஸ்ரீப்ரஹ்லாதாழ்வானுக்குக் கிட்டலாயிருந்தபடி எங்ஙனே?' என்று எம்பெருமானரைச் சிலர் கேட்க, 'ஸிம்ஹம் ஆனைமேலே சீறினுலும் குட்டிக்கு முலையுண்ணலாம்படி யிருக்குமிறே' என்று அருளிச்செய்தார். 'ஆச்ரித வாத்ஸல்யத்தாலே அவர்கள் விரோதிகள்மேலே சீறின சீற்றமானுல் பின்னை அவர்களுக்கு அணையவொண்ணுதபடி யிருக்குமோ?' என்று அருளிச் செய்தார்.

(**3-6-8** துயரமேதரு.)

95. (அன்றி மற்றிலேன் தஞ்சமாகவே) இவ்விடத்தை பட்டர் அருளிச் செய்யாநிற்க, ஜீயர், இவர் புக்கவிடமெங்கும் இப்படியே சொல்லுவர்; இவர்க்கு இது பணியிறே' என்ன' 'இவர் மற்றோரிடத்தில் தலைநீட்டுவது பாவநத்வத்தைப் பற்ற; இவர் தஞ்சமாக நினைத்திருப்பது சக்கரவர்த்தி திருமகனையே' என்று அருளிச் செய்தார்.

பட்டர் ராமாவதாரத்தில் பக்ஷபாதத்தாலே அருளிச் செய்யுமது கேட்கைக்காக சிறியாத்தான் "பெருமாளுக்கு எல்லாவேற்றங்களும் அருளிச்செய்ததேயாகிலும், பாண்டவர்களுக்காகக் கழுத்திலே ஓலைகட்டித் தூதுபோன க்ருஷ்ணனுடைய நீர்மையில்லையே சக்ரவர்த்தி திருமகனுக்கு" என்ன. "அதுவோ! பெருமாள் தூதுபோகாமையன்று காண்; இக்ஷ்வாகு வம்ச்யரைத் தூதுபோக விடுவாரில்லாமைகாண்" என்று அருளிச்செய்தார்.

எம்பெருமானார் திருவாராதநம் பண்ணிப்போருவது ஒரு பிள்ளையிறே; இங்ஙனேயிருக்கச்செய்தே ஒருநாள் ஒரு ஸ்ரீ வைஷ்ணவர் சக்ரவர்த்தி திருமகனை எழுந்தருளப் பண்ணிக்கொண்டு வந்து கொடுத்தாராய், அவரைப்பார்த்து "இந்த * மாமேகம் சரணம் வ்ரஜ * என்று தேவையிடாதார் எழுந்தருளினர்" என்றாராம்.

.... "ஒரு சிறாயை விச்வஸித்து ஆறுமாஸத்துக்கு வேண்டும் சோறும் தண்ணீரும் ஏற்றிக்கொண்டு கடலிலே இழியாநின்றான். அவ்வோபாதி விச்வாஸமாகிலும் வேண்டாவோ பகவத் விஷயத்தைப் பற்றுவார்களுக்கு?" என்று அருளிச்செய்வர்.

(**3-6-9.** தஞ்சமாகியதந்தை.)

96. (அவனுகும் நீள்கடல் வண்ணனே) ....அங்குத்தைக்கு உகந்தருளினவிடத்தை விபூதியாக நினையாதே, இங்குத்தைக்கு அவ்விடத்தை விபூதியாக நினையுங்கோள்" என்று பணிக்கும் ஆண்டான்.

(**3-7** பயிலுஞ்சுடரொளி—ப்ரவேசம்.)

97. * தத்பக்தைர் வா ஸமாகம: * என்கிற விடத்தில் 'வா' என்றத்தை அவதாரணத்திலே யாக்கி, 'உத்தேச்யந்தானே இங்கே ஸித்திக்குங்காண்' என்று எம்பெருமானார் அருளிச்செய்தவார்த்தை.

.... (கச்சதா)—இதுக்கு எம்பெருமானார் '*பயிலுஞ்சுடரொளியிலும்* நெடுமாற்கடிமையிலும் சொல்லுகிற அர்த்தத்தை ஸ்ரீ சத்ருக்நாழ்வான் அநுஷ்டித்துக் காட்டினான்' என்று அருளிச்செய்வர்.

.... எம்பெருமானார் இச் ச்லோகத்துக்கு வாக்யார்த்தமாக, 'ஸ்ரீசத்ருக்நாழ்வான் பெருமாளுக்கு நல்லனனபடி—பெருமாளைக் காற்கடைக்கொண்டு, பெருமாளுக்கு நல்லனை ஸ்ரீ பரதாழ்வானையல்லது அறியாதபடியானான்' என்று அருளிச்செய்தார்.

(**3-7-1** பயிலுஞ்சுடரொளி.)

98. [பயில இனிய] ...."பண்டிவரை" இத்யாதி. முதல்நாள் கண்டால் ஸ்வாபாவிக சேஷித்வத்தாலும் முகத்தில் தண்ணளியாலுமாக, காணாது கண்டவனுக்கும், 'பண்டு கண்டுவிட்ட முகமோ?' என்று தோற்றியிருக்கும்; சிலநாள் பரிசீலித்தால் 'பண்டு இவரை நாம் கண்டறியோமீ!' என்று தோற்றியிருக்கும். இரண்டுக்கும் சப்தம் ஒத்திருக்க இவ்வர்த்தத்தைக் காட்டும்படி எங்ஙனே ? என்று நான் கேட்டேன் ; " பயில்கின்றாளால் "

என்று ப்ரதம தசையோடு சரமதசையோடு வாசியற வார்த்தை இதுவேயாயிருந்தது கண்டீரே என்று அருளிச்செய்தார்.

(3-7-2. ஆளும் பரமனைக் கண்ணனை.)

99. [நான்கு] பட்டர் திருக்கோட்டியூரிலே எழுந்தருளியிருக்கச் செய்தே அனந்தாழ்வான் கண்டு, 'பரமபதத்தில் ஸர்வேச்வரன் சதுர்ப்புஜனுயோ த்விபுஜனுயோ எழுந்தருளியிருப்பது ?' என்ன, 'ஏகாயநர் த்விபுஜன் என்னுநின்ருர்கள் ; நம்முடையவர்கள், சதுர்ப்புஜன் என்னு நின்ருர்கள்' என்ன, 'இரண்டிலும் வழியேது ?' என்ன, 'த்விபுஜனுயிருந்தானுகில் பெரிய பெருமாளைப்போலே யிருக்கிறது : சதுர்ப்புஜன் என்று தோற்றிற்ருகில் பெருமாளைப்போலே யிருக்கிறது' என்று அருளிச்செய்தார்.

..........நிலாத்துக்குறிபகவர், பட்டரை, 'ஸ்ரீவைகுண்டத்திலே சதுர்ப்புஜனுயிருக்குமென்னுமிடத்துக்கு ப்ரமாணமுண்டோ ?' என்ன * தமஸ: பரமோ தாதா சங்கசக்ர கதாதர : * என்று உண்டாயிருந்ததே' என்ன, உத்தரமில்லாமையாலே விக்ருதராக 'ப்ரமாணகதி இதுவாயிருந்தது ; பொறுக்க லாகாதோ ?' என்று அருளிச் செய்தார்.

(3-7-3. நாதனை ஞாலமும்.)

100. [வல்லாரைப் பணியுமவர் கண்டீர்.]..... "பிள்ளையாத்தான் என்று போர நல்லனுயிருப்பானொருவன், ஜீயர் ஸ்ரீ பாதத்திலே வந்து 'எனக்கு ஒருரு திருவாய்மொழி அருளிச்செய்யவேணும்' என்ன, 'உனக்கு விசதமாவன பிள்ளையோடே கேட்டாலாயிற்று ; அங்கே கேள்' என்ன, 'அவரைத் தெண்டனிட வேணுமே' என்ன, 'அது ஒன்று உண்டோ ? வேணுமாகில் செய்கிருய்' என்று, என்னையழைத்து, 'இவனுக்குப் பாங்கானபடி ஒருரு திருவாய்மொழி சொல்லும்' என்ன, இவ்வளவும் வரக் கேட்டவாறே என்னை மிகவும் அநுவர்த்திக்கப் புக, நான் ஓட்டாதொழிய, ஜீயர் பாடே சென்று 'இவ்வர்த்தத்தினுடைய சீர்மையறியாமையாலே முன்பு அப்படிச் சொன்னேன் ; இனி நான் அநுவர்த்தித்ததுக்கு இசையும்படி அருளிச் செய்யவேணும்' என்று ஜீயரையிட்டு நிர்ப்பந்தித்து அநுவர்த்தித்தான்" என்று அருளிச்செய்வர்.

... ...

..........வீரப் பிள்ளையும் பாலிகை வாளிப் பிள்ளையும் என்று இருவர் ஜீயர் ஸ்ரீபாதத்துக்கு ஏகாந்தராய், தங்களிலே செறிந்து போந்தார்களாய்த் தேசாந்தரப் போனவிடத்தே வெறுப்புண்டாய்த் தங்களில் வார்த்தை சொல்லாதே யிருக்க, இவர்களைப் பார்த்து "பிள்ளைகாள் ! அர்த்த காமங்கள் த்யாஜ்ய மல்லாமையோ, பகவத் விஷயம் அராட்டுப் பிராட்டாயோ ஒரு ஸ்ரீவைஷ்ணவனும் ஸ்ரீவைஷ்ணவனும் தங்களிலே வார்த்தை சொல்லாதே வெறுத்திருக்கிறது ?' என்ன, இருவரும் எழுந்திருந்து தெண்டனிட்டு ஸங்கதராய்ப்போனுர்கள்.

(3-7-10. அடியார்ந்த வையமுண்டு).

101. (அடியார் இத்யாதி)........ இப்போதும் தம்முடைய ருசிக்கு அவதியுண்டாய் இவ்வளவிலே நின்ருரல்லர் ; சந்தஸ்ஸில் இதுக்கு அவ்வருகு போகவொண்ணுமே நின்றதித்தனையிறே. 'இப்படி வைஷ்ணவர்களை விரும்பினுல் இது லௌகிகரோடு சேராதிருந்ததாகில் ஆழ்வார் விருப்பினத்தை விச்வஸித்தோ மாகிறேமே' என்று ஜீயர் அருளிச் செய்யும்படி.

(3-8. முடியானே ; ப்ரவேசம்)

102. குஹேந ஸார்த்தம் தத்ரைவ ஸ்த்திதோஸ்மி திவஸாந் பஹூந்)—ஸ்ரீ குஹப் பெருமாளோடேகூடி, பெருமாளைப்பிரிந்த விடத்தில்நின்றும் கால்வாங்கமாட்டாதே நின்ரு

ஞயிற்று ஸுமந்த்ரன்; அங்கு நின்றது ஒன்றிரண்டு நாளாயிருக்கச்செய்தே (பஹூந்) என்னாநின்றதாயிற்று; பிரிவாலே காலம் நெடுகினபடி. 'ஸ்ரீகுஹப்பெருமாளோடே நிற்க, காலம் நெடுகுவானென்?' என்று மிளகாழ்வானைக்கேட்க, 'ஸ்மாரக ஸந்நிதியில் ஆற்றாமை இரட்டிக்குமிறே' என்று அருளிச்செய்தாராம்.

(3-8-9 கோள்வன்நான் மாவலி)

103. [உன்னை எஞ்ஞான்று பொருந்துவனே] ....*அநந்யா ராகவேணஹம்* ....'அநந்யா' என்கிற பிராட்டியினுடைய வார்த்தை எல்லார்க்குஞ் சொல்லலாம்படியிறே ஸ்வரூபத்தை யுணர்ந்தால் இருப்பது: ஈச்வரனில் பிராட்டிமார்க்கு பேதஞ்சொல்லுகிற ப்ரமாணங்களெல்லாம்—அல்லாதாரோபாதி பிரிவுண்டென்னுமிடம் சொல்லுகிறன; ஐக்யஞ்சொல்லுகிற விடமெல்லாம்—'பாரதந்த்ர்ய காஷ்டையைப் பற்றச் சொல்லுகிறன' என்று ப்ராஸங்கிகமாக ஒருருவிலே அருளிச்செய்தார்.

(3-9-2. உளனாகவேயெண்ணி)

104. (மதிக்கும்)—தானே இத்தைக் குவாலாக மதிக்குமித்தனையிறே. புறம்பு இத்தை ஒன்றாக நினைக்கைக்கு இவன்தனை அவஸ்துக்களில்லையே. கல்ப்ரஹ்மதேசத்திலே கரிக்கால்சோழ ப்ரஹ்மராயன் 'திருவாய்மொழிக்கு வ்யாக்யானஞ் செய்தேன்' என்று ஜீயர்க்குக் காட்ட, அவன் பக்கல் உபஜீவநங்களை நினைத்து, பிள்ளையை 'நீர் இத்தைக் கேட்டு ஸம்பாவியும்' என்று அருளிச் செய்ய, இவரும் கேட்டு, 'ஆழ்வார் திருவுள்ளத்தை அடியொற்றி அவர் போனவழியே போம்படியே!' என்ன, 'ஆ! ஆ! பிள்ளை! ஆழ்வார்க்கும் எனக்கும் வாசி புத்திபண்ணிற்றிலையோ? க்ராம கார்யஞ்செய்து இடையிலே இதுவுஞ் செய்யவேண்டிற்றே' எனக்கு என்றான்.

[கண்ணன் குறுங்குடி]—ஸர்வேச்வரன் 'என்னது' என்று அபிமானித்து வர்த்திக்கும் நகரமாயிற்று. 'கண் நல் குறுங்குடி' என்று வ்யாக்யானம் பண்ணினார்கள் தமிழர்; அப்போது, இட்முடைத்தாய் நன்றான திருக்குறுங்குடியிலே யென்று பொருள்.

(3-9-6. வம்மின் புலவீர்.)

105. [நும் மெய்வருத்திக் கை செய்து உய்ம்மினோ] இதுக்கு எம்பாருளிச் செய்யும்படி;—கோட்டை சுமத்தல், புல் சிரைத்தல் செய்யமாட்டீர்களோ என்று.

(3-9-7. சேரும்கொடை புகழ்.)

106. [பாரில் ஓர் பற்றையை]......அன்றிக்கே, பாரென்று நத்தமாய், அத்தால்-ஒரு குடிப்பற்றின்றிக்கே யிருக்கை. பற்றையை—கைப்பட்டத்தை இறுகப் பிடித்து ஒருவர்க்கு ஒன்று ஈயாதவர்களை என்று ஒரு தமிழன் வியாக்கியானம் பண்ணினான். த்ருணஸமன் என்று சொல்லிப்போருவது.

(3-9-9. வாய்கொண்டு மானிடம்பாட.)

107. [வீடும்தரும் நின்று நின்றே.] இப்படி முழுக்கக் கொடுத்தாலும் இவனுக்கு நாமொன்றும் செய்யப் பெற்றிலோமேயென்று * ருணம் ப்ரவ்ருத்தமிவ மே * என்று திருவுள்ளத்தாலே மிறுக்குப்பட்டு நிற்கும் என்று நம்மாசார்யர்கள் நிர்வஹிக்கும்படி. ஒரு தமிழன் 'அடைவடைவே தரும் சொன்னவற்றை' என்றான்.

(3-10-5. இடரின்றியே யொருநாள்.)

108. [உடலொடுங்கொண்டு கொடுத்தவனை] பூசின மஞ்சளும் உடுத்தின பட்டும் இட்ட சவடிப்பூணூலும் இட்ட காதுப் பணிகளுமான வொப்பனையில் ஒன்றுங் குறையாத படி கொண்டு வந்து கொடுத்தவனை யென்றுமாம். பிறக்கப்பிறக்கக் கொண்டு போனார்க ளாகில் அப்போது இவையெல்லா முண்டோவென்று பட்டரைக் கேட்க, ருஷிபுத்ரர்க ளாகையாலே பிறக்கிறபோதே அவற்றோடே பிறப்பர் காணுமென்றருளிச் செய்தார்.

நான்காம்பத்து

(4-1-5- பணிமின் திருவருள்.)

109. (பணிமின்திருவருளென்னு மஞ்சீதப் பைம்பூம் பள்ளி அணிமென்குழலார்) ஸ்த்ரீகளோடேசேர்த்து நிர்வஹிப்பர்கள் முன்புள்ள முதலிகள்; பட்டர், அங்ஙனன்றிக்கே, "பணிமின் திருவருள்" என்கிறவித்தை--(இன்பக்கலவியமுதுண்டார்) என்கிறவர்களோடே சேர்த்தருளிச்செய்வர்.

(4-1-9-படிமன்னுபல்கலன்.)

110. (குடிமன்னுமின் சுவர்க்கமெய்தியும்) "இதுக்குமாள் பற்றுவதே!" என்று பட்டர் அருளிச்செய்வர்.

(4-2 பாலனாய் ப்ரவேசம்)

111. "இவ்வொருநாயக மருளிச்செய்தவரேகிடிகோள் 'சூழ்விசும்பணிமுகிலு' மருளிச்செய்தார், இத்தை ஸ்ரீவைஷ்ணவர்கள் திருவுள்ளம் பற்றுங்கோள்" என்று பிள்ளை யருளிச்செய்வர். அதாவது இது ப்ரத்யக்ஷிக்கிறப்போலே இச்சரீர ஸம்பந்தாபதுவுங் காண வன்றோ நாம் புகுகிறது, இனி எத்தனை நாளென்று.

(4-3. கோவைவாயாள். ப்ரவேசம்.)

112. ஸர்வேச்வரனுடைய "பாலனாயேழுலகு"—இது தனக்கு மூன்றுபடியாக நிர்வஹிப்பர்கள் நம்முதலிகள்;—எம்பார், "அப்புலியம்மானைப் பிடித்துத்தரவேணும்" என்றழுத ப்ரஜைக்கு தேங்காயைக் கொடுத்து அழுகையை யாற்றுவாரைப்போலே, வேறொரு குணவிஷ்காரத்தைப்பண்ணி யநுபவிப்பிக்க வநுபவிக்கிறார்" என்றருளிச் செய்வர் திருமலை நம்பி, "ஒருவன் ஒன்றை யபேக்ஷித்தால், அவனுமது செய்வானாகத் தலை துலுக்கினால், பெற்றானாய்ப் பின்பு பின்னிலிழவு தோன்றாப்படி யன்றிருப்பது; ஆகை யாலே, அவனும் 'அப்படியே செய்கிறோம்' என்னக் கீழிலிழவை மறந்து எல்லாம் பெற்றாரா யநுபவிக்கிறார்" என்று; ஸ்ரீ கௌஸல்யார், பெருமாள்வனத்துக் செழுந்தருளு கிறபோது "ஏகபுத்ரையான நானும்மைப் பிரிந்திருக்கமாட்டேன், கூடப்போருமித்தனை" என்ன, "ஆச்சீ, நீர் சொல்லுகிறவிவை தர்மஹானிகிடீர்" என்று முகத்தைப் பார்த்தொருவார்த்தை யருளிச்செய்ய, இழவு மறந்து பக்களாமாளாய் டண்ண மீண்டா ளிறே; க்ருஷ்ணன "மாசுச:" என்றொரு வார்த்தை யருளிச்செய்ய அர்ஜுனன் "ஸ்திதோஸ்மி கதஸந்தேஹ:" என்று தரித்தானிறே. பட்டர், "காலத்ரயத்தி லுள்ளதவையு மிப்போதே பெறவேணுமென்று விடாய்த்த விவர்க்கு அப்படியே அநுபவிக்கலாம்படி, காலச்க்கரத்தானாகையாலே காலோபாதியைக் கழித்து, வர்த்தமான காலத்திற்போலே அநுபவ யோக்யமாம்படி காலத்தை யொரு போகியாக்கிக்கொடுக்க வநுபவிக்கிறார்" என் றருளிச்செய்வர்.

(**4-3-3.** ஏகமூர்த்தி.)

113. (ஆவியல்லல்மாய்த்ததே) உன் திருவுள்ளத்திலுண்டான அல்லல் ஒருபடி நசிக்கப்பெற்றதே. இத்தலையை ஒருபடி கரைமரஞ் சேர்த்து நீ க்ருதக்ருத்யனானாயே !. அன்றிக்கே, என்னுடைய ஆவியானது நிர்துக்கமாயிற்றென்றுமாம். அதவா, ஏகமூர்த்தியென்று—பரத்வத்தைச்சொல்லி, இருமூர்த்தியென்று-வ்யூஹத்தைச்சொல்லி, வாஸுதேவ ஸங்கர்ஷணர்களை நினைத்து, மூன்று மூர்த்தியென்று - ப்ரத்யும்நரைச்சொல்லிற்றாய், பலமூர்த்தியென்று - விபவங்களைச் சொல்லிற்றாய், ஐந்துபூதமாயிரண்டு சுடராயென்று - இன்னார் ஸ்ருஷ்டிக்குக்கடவர், இன்னார் பாலனத்துக்குக் கடவர், என்கிறபடியாலே சொல்லுகிறதென்று நிர்வஹிப்பாருமுண்டு.

(**4-3-8.** என்னதாவி மேலையாய்.)

114. (உன்னதென்னதாவியு மென்னதுன்னதாவியும்) என்னுடையவாவி யுன்னது, உன்னுடைய ஆவி யென்னது. என் ஸ்வரூபம் நீயிட்ட வழக்கு, உன்ஸ்வரூபம் நானிட்ட வழக்கு. இவ்விடத்தை ஆளவந்தார் அருளிச்செய்யா நிற்கச்செய்தே இருந்த முதலிகளிலே சிலர், “இவ்வாத்மாவின் ஸ்வரூப மவனிட்ட வழக்கென்றால் கூடுமே, அவன் ஸ்வரூப மிவனிட்ட வழக்காகையாவதென்” என்று கேட்க, “இவன் ‘தன்னை அவனுக்காக்குவன்’ என்றவன்று, கர்மத்தகையவுங்கூடும், ‘இவன் ஸ்வரூப மவனிட்ட வழக்காக்கக்கூடுமோ’ என்று இதிலே காணும் ஸந்தேஹிக்கவேண்டுவது” என்றருளிச்செய்தார்.

(**4-4-4.** ஒன்றிய திங்களைக்காட்டி.)

115. (நெடுமாலே வாவென்று கூவும்) “வடிவில் பெருமையைக் கண்டவாறே, ‘ஜகத்தையடைய தன் திருவடிகளின் கீழே யிட்டுக்கொள்ளும்படி பெரிய வடிவையுடைய திருவுலகளந்தருளின ஸர்வேச்வரன்’ என்று நினைத்து, இங்ஙனே வாராயோவென்றழைக்கும்” என்று பிள்ளான் பணிக்கும்; அங்ஙனன்றிக்கே, ஜீயர் “மலை பேரமாட்டாதே, பலகால் வர்ஷிக்கையாலே அழுக்கற்றுப் பசுகுபசுகு என்றிருக்குமே; அத்தைக் கண்டு, ‘அவன் ஸாபராதனாகையாலே லஜ்ஜித்து, வந்து கிட்டமாட்டாமையாலே டச்சசப் பிடாத்தையிட்டு முட்டாக்கிட்டு நிற்கிறான்’ என்று, ஆனைக்கூட்டத்துக்குக் கதவிடுவன்றோ உமக்கு லஜ்ஜிக்கவேண்டுவது, இங்ஙனே போரீரென்னா நின்றாள்” என்று.

(**4-5-1.** வீற்றிருந்து.)

116. (வெம்மாபிளந்தான்றன்னை) “ஆற்றல்மிக்காளும்படி சொல்லுகிறது” என்று பட்டருளிச்செய்யும்படி ; “ஆற்றல்மிக்காளு மம்மானென்றால், இன்னானென்கிறது”—என்று அம்மங்கியப்பாள் நிர்வஹிச்சபடி.

(**4-5-6.** கரியமேனிமிசை.)

117. (கரியவித்யாதி) கறுத்த நிறத்தாலே வந்த வழுக்குக்குமேலே அதுக்குப் பரபாகமான திருக்கண்களிலே அஞ்சனத்தை யிடுபென்றுமாம். அன்றிக்கே, “கரியென்று - ஆனையாய், அத்தால் நினைக்கிறது - குவலயாபீடமாய் ; குவலயாபீடமானது, அம்மேனியிலே - அழகிய திருமேனியிலே; வெளிய — சீற, அத்தை, நீறுசிறுதேயிடும் - பொடியாக்கும்” என்றொரு தமிழன் நிர்வஹித்தான்.

(**4-5-7.** என்றுமொன்றாகி.)

118. (தன்றனக்கின்றிநின்றானை) எம்பெருமானார் தெற்கே யெழுந்தருளுகிற நாளிலே ஆளவந்தார் மகனார் சொட்டைநம்பி ப்ரஸாதித்த வார்த்தை - “தன்றனக்கென்

றது – தானுனதனக்கென்றபடி. ஒருவகைக்கொப்பின்றிக்கே யிருக்கிறது பரத்வத்தி லல்ல, 'ஆத்மாநம் மாநுஷம் மந்யே' என்கிறபடியே - அவதரித்து மனிச்சேறிட்டுக் கொண்டு நிற்கிற நிலையிலே" என்றாராம்.

(4-5-8. நமக்கும் பூவின்மிசை.)

119. (லோகநாத:புராபூத்வா ஸுக்ரீவம்நாதமிச்சதி) கிடப்பது கிடையாதொழி வது, இச்சியா நின்றார். ["ஸுக்ரீவம் ஶரணங்கத:"] "ஸ்ரீ விபீஷணாழ்வானைப் புகுர வொட்டேன்' என்றார் மஹாராஜர், 'இவன் புகுராவிடில் நாமுளோமாகோம்' என்கிறார் பெருமாள், இப்படி யிருவரும் விப்ரதிபத்தி பண்ணின் விதுக்குக் கருத்தென்" என்று ஜீயர்கேட்க; "இருவரும் 'சரணாகதரானவர்களை விடோம்' என்று விப்ரதிபத்தி பண்ணு கிறார்கள் காணும்" என்று பட்டரருளிச்செய்த வார்த்தை. "ஸுசரீவம் சரணங்கத:" என்றத்தை நடத்தப்பார்த்தார் மஹாராஜர், "ராகவம் சரணங்கத:" என்றத்தை நடத்தப் பார்த்தார் பெருமாள்.

(4-3-5 கண்ணியேனதுயிர்.)

120. (ஏனுமாடையுமஃதே) திருவரைக்குத் தகுதியான ஆடையென்னுதல்; புரு ஷோத்தமத்வத்துக்குத் தகுதியான வென்னுதல். ஒருநாள் ஸ்ரீவைஷ்ணவ வண்ணாத்தான் திருப்பரிவட்டங்களை அழகியதாக வாட்டிக்கொண்டுவந்து எம்பெருமானாருக்குக்காட்ட, போர த்ருப்தராய் அவனை பெருமாள் திருவடிகளிலே கைப்பிடித்துக்கொண்டுபுக்கு "நாயன் தே இவன் திருவரைக் கீடாம்படிவாட்டினபடி திருக்கண்சாத்தியருளவேணும்" என்றிவற் றைக் காட்டியருள, கண்டுகந்தருளி உடையவரை அருள்பாடிட்டருளி "இவனுக்காக ரஜகன் நம்திறத்திற்செய்த குற்றம் பொறுத்தோம்" என்று திருவுள்ளமாயருளினர்.

(4-4-8 திருவுடைமன்னரை)

121. (திருவுடை மன்னரைக்காணில்) நாதமுனிகள், ராஜா ஸாமந்தன் தலையிலே அடியையிட்டு ஆனைக்கழுத்திலே புக்கபடியைக்கண்டு, "ஸர்வேச்வரன் ப்ரஹ்மாதிகள் தலை யிலே யடியிட்டு பெரியதிருவடியை மேற்கொள்ளும்படி இதுவாகாதே" என்று மோஹித்தா ரென்று ப்ரஸித்தமிறே; ராஜா ஸபரிகரமாக கங்கைகொண்ட சோழபுரத்தேறப் போகச் செய்தே, பெரியமுதலியார் மன்னனார் திருவடிகளிலே ஸேவித்திருக்கச்செய்தே, பெண் பிள்ளைவந்து, "நம்மகத்திலே ஒருகுரங்கு மிரண்டு வில்லிகளு மொரு பெண்ணுமாக வந்து புகுந்தார்கள்" என்றவாறே, பெருமாளு மிளையபெருமாளும் பிராட்டியும் ஐந்த்ரவ்யாகரண பண்டிதனும்" என்று புத்திபண்ணி பின்றொடர்ந்துபோய் முன்னேபோய் "போகிறார்கள், போகிறார்கள்" என்னக்கேட்டுக் கீழைவாசலிலே சென்றவாறே "இப்படி போகிறவர்களைக் கண்டிகோளோ" என்று வாசலிலவர்களைக்கேட்க, அவர்கள் "கண்டிலோம்" என்ன, அதுவே ஹேதுவாகத் திருநாட்டுக்கெழுந்தருளினாரிறே.

(4-4-9 விரும்பிப்பகவரை.)

122. ராஜேந்திர சோழனிலே திருவாய்க்குலத்தாழ்வாரென்று ஒருத்தருண்டு, அவர் வர்ஷாவிலே "பயிர்பார்க்க" என்று புறப்பட்டு மேகதர்சனத்திலே மோஹித்துவிழுந் தார்; இவர்விழுந்தத்தைக்கண்டுநின்ற குடிமகனோடிவந்து அவரை யெடுத்துக்கொண்டுவந்து க்ருஹத்திலேவிட்டு, "இவர் ப்ரக்ருதி அறிந்திருந்து மிந்நாளிலே இவரை வயல்பார்க்கப் புறப் படவிடுவாருண்டோ" என்றான்.

(4-6. தீர்ப்பாரையாமினி ப்ரவேசம்.)

123. கீழ்*வீற்றிருந்தேழுலகாயிருக்க, அனந்தரம் * தீர்ப்பாரையாமினியாயிருக்கிற திறே. எம்பார் கீழில் திருவாய்மொழியையும் இத்திருவாய்மொழியையும் அநுஸந்தித்து. மோருள்ளதனையும் சோறேயோ? அதிலே அப்படி நிரவதிகப்ரீதியாய்ச் சென்றது; இதில் இப்படி மோஹத்தோடே தலைக்கட்டிற்று; இதுக்கு இருந்து அடைவு சொல்லுவேனே? இதுக்கு *அஸங்கதிரேவ ஸங்கதி: என்று அருளிச்செய்வராம்.

(அவ்விடத்திலேயே, ப்ரவேசத்தின் முடிவில்)

124. ராவணன் மாயாசிரஸ்ஸைக் காட்டினபோது பிராட்டியும் அல்லாத ஸ்த்ரீகளோபாதி சோகித்துக் கண்ணநீர்விழவிட்டிருந்தாளாயிருந்தது; இதுக்கு அடி என்? இது கேட்டபோதே முடியவன்றோ ப்ராப்தம் என்று ஜீயரைக்கேட்க; அவதாரத்தில் மெய்ப்பாட்டாலே மெய்யென்றே சோகித்தாள்; ஜ்ஞானமன்றியிலே ஜீவிக்கைக்கு ஹேது அவருடைய ஸத்தையாகையாலே உளளாயிருந்தாள்; இவ்வர்த்தம் மெய்யாகில் ஸத்தையுமில்லையாம் என்றருளிச் செய்தார்.

(4—6—1 தீர்ப்பாரையாமினி.)

125. (தீர்ப்பாரை யாமினி யெங்ஙனம் நாடுதும்) இதுக்கு மூன்றுபடியாக வருளிச் செய்தருளுவர். [ஈடு ஸேவிக்க.]

126. (அவ்விடத்திலேயே) [ஓர்ப்பால்] இவள்தானொரு கூரத்தாழ்வானோடொக்குங் காணும்.

(4-6-2 திசைக்கின்றதே யிவள்நோய்)

127. (இசைப்பின்றியித்யாதி.).........இங்கே அருளிச்செய்யும் வார்த்தை;—பிள்ளையுறங்காவில்லிதாஸர் குடிமகனொருவனுக்கு ஐயனார் ஏறி வலித்து நலிந்தவாறே உனக்கு

பிழை திருத்தம்.

கீழே 23, 24 ஆம் பக்கங்களில் அச்சுக்கூடத்தவருகச் சில பிறழ்வுகள் நேர்ந்து விட்டன. அவற்றின் திருத்தம் இங்குத் தெரிவிக்கப்படுகிறது.

பக்கம் 23ல், 114 லக்கமுள்ள ஐதிஹ்யம் 115 ஆக எண்ணத்தக்கது. பக்கம் 24ல், 120 லக்கமுள்ள ஐதிஹ்யம் 114 ஆக எண்ணத்தக்கது.

அன்றியும் ஓர் ஐதிஹ்யம் விடுபட்டது; அதாவது—

(4—3—11.) உய்வுபாயம்.) [வையம்மன்னி வீற்றிருந்து விண்ணுமாள்வர் மண்ணூடே] என்கிறவிடத்தே நெடுங்காலம் பூமியிலே ஸ்ரீ வைஷ்ணவ ஸ்ரீயோடே * நாட்டாரோடியல் வொழிந்து* என்கிறபடியே தங்கள் வ்யாவ்ருத்திதோற்ற இருக்கப்பெறுவர்கள்' என்று ஜீயர் உருத்தோறு மருளிச்செய்வர். பால்யத்திலே பட்டரைப் பறிகொடுத்தாரிறே அவர்.

(4-5-8 நமக்கும் பூவின்மிசை)

(சோன்மாலைகள்.) ஸர்வேச்வரன் 'ஆழ்வீர்! நம்மையொரு கவி சொல்லும்' என்றால் அப்போதே கவி சொல்லச் சமையும் படியாகவல்ல வெனக் கென்கிறார்—என்று முன்புள்ள முதலிகள் நிர்வஹிக்கும்படி. அங்ஙனன்றிக்கே பட்டர், *என்னுகியே தப்புதலின்றித் தனைக்கவி தான் சொல்லி* என்கிறபடியே ஸர்வேச்வரன் கவிபாடினுனுகையாலே கவிபாடத் தட்டில்லை; அவன் அங்கீகரித்துத் திருக்கண்களால் குளிரக் கடாக்ஷித்து நீரொரு கவி சொல்லு மென்றால் ப்ரீதியாலே உடைகுலைப்படாதே தரித்து நின்று சொல்லவல்லேனை வெனக்கு என்றருளிச் செய்வர்.

வேண்டுவதென்னென்று கேட்க; எனக்குப் பாலும் பழமுமாக வுண்ணவேணும். சாந்தும் புழுகும் பூசவேணும்; நல்லபுடவையுடுக்கவேணும்; நல்ல ஆபரணம் பூணவேணும், தண்டேற வேணும், அணுக்கனிடவேணும்—என்ன; அவர்களும் அப்படியே செய்கிறோம் என்று, பிள்ளை திருமாளிகையிலே வந்து சாந்து புழுகு ஆபரணாதிகளை வாங்கிக்கொண்டுபோய் அவற்றை அலங்கரித்து சாந்தியும் பண்ணிவிட்டுவந்த அவ்விரா பண்டையிலும் இரட்டியாக அவனை வலிக்க, இதுவென்? என்று கேட்க; பிள்ளை சாத்துகிறவற்றை யெல்லாம் கொண்டு வந்திகோள்; இவர்க்குச் சாத்துகிற அணுக்கனையிட்டிகோள்; நான் அதின்கீழே போவேனோ? என்னை வெயிலிலே கொண்டுபோனிகோள்; என்னுடம்பிலே நெருப்பை வழியட்டினாற் போலே அவர் சாத்துகிறவற்றைப் பூசினிகோள்; அரிகண்டமிட்டாற்போலே அவர் சாத்துகிற ஆபரணத்தைப்பூட்டினிகோள்; நீங்கள் செய்த செயலுக்கு இவனைக் கொண்டல்லது போகேன் என்று வலித்ததாம்.

128. (அவ்விடத்திலேயே) [சங்குசக்கரமேன்றிவள்கேட்க] ஆய்ச்சிமகனுடைய அந்திமஸமயத்திலே பட்டர் அறியவென்று எழுந்தருளியிருந்தாராய், தம்மையறியாதே கலங்கிக் கிடக்கிறபடியைக் கண்டு, பெருமாளுக்கு இவர் ஸ்நேஹித்திருக்கும்படியை யறிந்திருக்கையாலே மெள்ளச் செவியிலே யூதினாற்போலே 'அழகிய மணவாளப் பெருமாளே சரணம்' என்றாராம்; அனந்தரம் அதிலே உணர்த்தியுண்டாய் நெடும்போதெல்லாம் 'அழகிய மணவாளப் பெருமாளே சரணம்' என்று திருநாட்டுக்கு நடந்தாராம்.

(4-6-3 இதுகாண்மினன்னைமீர்.)

129. ....[மிக்கசீர் இத்யாதி] அநந்யப்ரயோஜநரான ஸ்ரீவைஷ்ணவர்களிட்ட திருத்துழாயில் பரிமளத்தை வண்டு கொண்டுவந்து ஊதுமாகில். இப்படி ஜீயர் அருளிச் செய்தவாறே 'துளவின்வாசமே' என்னவமையாதோ? *மிக்கசீர்த்தொண்டரிட்ட என்கிற இவ்விசேஷத்துக்குக் கருத்தென்? என்று நான்கேட்டேன்; இவள்தான் நோவுபடுகிறது அத்தலைக்குப் பரிவரில்லையென்றாயிற்று; அங்கே அநந்ய ப்ரயோஜநர் பரிமாறாநின்றார்கள் என்றவாறே உறங்காத கண்ணும் உறங்கும்; பழைய நிறமும் வருங்காண் என்றருளிச் செய்தார்.

(4—6—6. தணியும் பொழுதில்லை.)

130. (மாயன் தமரடி நீறுகொண்டு.) வண்டரும் சொண்டரும் என்கிறவர்களுக்கு அரையன் சொன்ன வார்த்தைக்குப் பிள்ளையுறங்கா வில்லிதாஸர் பரிஹாரம் பண்ணின படியை நினைப்பது. அதாவது, அகளங்கநாட்டாழ்வான் இவர்களுக்கு அமணன் பாழியில் ஸிம்ஹத்தைக் காட்டி 'திருமுற்றம், திருவடி தொழுங்கோள்' என்ன; அவர்களும் மெய்யென்று திருவடிதொழுது, அது அமணன் பாழியென்றறிந்தவாறே மோஹித்து விழ, பிள்ளையுறங்காவில்லிதாஸர் தம் ஸ்ரீ பாத தூளியை அவர்களுக்கு இட, உணர்ந்து எழுந்திருந்தார்கள். திருக்கொட்டாரத்தினருகே கைந்நிரை கட்டிக்கொண்டிருக்கிற நாளிலே ஜீயர் இத்திருவாய்மொழியருளிச்செய்கிறாராய் இவ்வளவிலே வந்தவாறே, தேர்ப்பாகனார்க்கு* என்று நோவுக்கு நிதாநம் சொன்னாளாகில் அவனையிட்டுப் பரிஹரியாதே * மாயன் தமரடி நீறு கொண்டு அணிய முயலின் * என்று இத்தைப் பரிஹாரமாகச் சொல்லுவானென்? நோவுக்கு நிதாநமொன்றும் பரிஹாரமொன்றுமாயோ இருப்பது? என்று நான் கேட்டேன்; மோர்க்குழப்பு இழியாதே மோஹித்துக்கிடந்த ஸமயத்தில் சுக்கிட்டு ஊதிப் பின்பு மோர்க்குழம்பு கொடுத்துப் பரிஹரிப்பாரைப் போலே * தேர்ப்பாகனார்க்கு * என்றபோதே அவரைக்கொடுவந்து காட்டப் பெருமையாலே முற்பட இவ்வழியாலே

ஆச்வஸிப்பித்துப் பின்னை அவனைக் கொடுவந்து காட்டுவதாகக் காணும்—என்றருளிச் செய்தார்.

(4—6—7. அணங்குக்கருமருந்தேன்று.)

131. (உணங்கல்கெட.) ....அன்றிக்கே, ஐயன் திருக்குருகைப் பெருமாளரையர் நிர்வஹிக்கும்படி —"உணங்கல் கெட — இவளுடைய உணங்குதல் கெட; இவளிளைப்புத்தீர. கழுதென்று பேய்; கழுதை — பேயை; உதடாட்டம் கண்டு என்பயன்—நீங்கள் ஆடுங்கள்ளும் பாரித்துக் கொடுக்க, அத்தை அது விநியோகங்கொள்ளும்போது அதனுடைய உதடாடுகிறத்தைக் கண்டிருக்கிறத்தால் என்ன ப்ரயோஜனமுண்டு? என்று. * கழுது பேயும் பரணும் * என்றானிறே.

(4—6—11. தொழுதாடித்தூமணி.)

132. [தொழுதாடித் தூமணி வண்ணனுக்காட் செய்து நோய்தீர்ந்த] என்றதுக்கு அம்மங்கியம்மாள் பணிக்கும்படி—மோஹித்தவள் அல்பம் ஆச்வஸித்தவாறே மோர்க்குழம்பு குடித்தாள், தரித்தாள், கண் விழித்தாள், வார்த்தை சொன்னாள் என்பர்களிறே; அது போலே காணும் என்று.

(4—7—5. அப்பனே யடலாழியானே.)

133. [ஏழையேன் நோக்குவனே.] ஆழ்வான் பணித்த வரதராஜஸ்தவத்திலே ஒரு ச்லோகத்தைக் கேட்டு எம்பெருமானார் 'இப்பாசுரங் கேட்டால் பெருமாள் இரங்காமையில்லை; ஆழ்வான்! உன்முகத்தைக் காட்டிக் காணாய்' என்று பார்த்தருளினார்.

(4—7—8. கண்டு கோண்டேன் கைகளார.)

134. [நின் திருப்பாதங்கள் மேல்]...........* 𑌤𑍍𑌵𑌤𑍍𑌪𑌾𑌦𑌪𑌙𑍍𑌕𑌜𑌪𑌰𑌿𑌗𑍍𑌰𑌹𑌧𑌨𑍍𑌯𑌜𑌨𑍍𑌮𑌾 𑌭𑍂𑌯𑌾𑌸𑌂—த்வத்பாத பங்கஜ பரிக்ரஹதந்யஜந்மா பூயாஸம் * என்கிறதுக்கு ஆளவந்தார் —"வார்த்தையழகிது, வகுத்த விஷயத்திலேயாகப் பெற்றிலோம்" என்றருளிச் செய்தார். (த்வத்பாதேத்யாதி ச்லோகம் பவபூதிகவியின் மாலதீ மாதவீயத்திலுள்ளது.)

(4—8—2. மணிமாமை குறைவில்லா.)

135. [அணிமானத்தடவரைத்தோள்]..........ஆபரணத்துக்கு ஆபரணமான தோள் என்று ஜீயர் அருளிச் செய்வர். அணியென்று அழகாய், மானமென்று பெருமையாய், அணிபெருகியதோள் என்று ஒரு தமிழன்.

136. (அவ்விடத்திலேயே. [பணிமானம் பிழையாமே அடியேனைப் பணிகொண்ட]..........இங்கே அருளிச் செய்யும் வார்த்தை; எழுந்தருளியிருக்கிற மடத்திலே ஸ்ரீவைஷ்ணவர்கள் அமுது செய்யாநிற்க, ஆச்சான் தண்ணீரமுது பரிமாறுகிறவர் ஓரருகே சாய நின்று பரிமாறினார்; அத்தை உடையவர் கண்டு ஓடிவந்து முதுகிலே மோதி, நேரே நின்றன்றோவுடோ பரிமாறுவது' என்றார்; என்ன, ஆச்சான் "பணிமானம் பிழையாமே அடியேனைப் பணிகொண்ட" என்று பணித்தான்.

(4-8-8. வரிவளையால் குறைவில்லா.)

137.......[பூங்கோள் இத்யாதி.] ஸ்ரீ ஜநகராஜன் திருமகளுக்கும் ருக்மிணிப் பிராட்டிக்குமுண்டான விடாய் தனக்கொருத்திக்குமுண்டாகையாலே, அவர்களிருவரும் பெற்ற பேற்றை நானொருத்தியும் ஒருகாலே பெறவேணுமென்கிறாள். "இது பட்டர் அருளிச் செய்ய நான் கேட்டேன்" என்று பிள்ளையருளிச் செய்வர். (மேலும் ஈடு ஸேவிக்க.)

(4-9. நண்ணாதார்—ப்ரவேசம்.)

138.......எம்பார் "உன்னைப் பிரிந்திருந்து படுகிற க்லேசத்தினளவல்ல உன்னை யொழியப் புறம்பே பேறுமிழவுமாயிருக்கிற ஸம்ஸாரிகள் நடுவே யிருக்கிற இருப்பால் படுகிற க்லேசம்; இத்தைத் தவிர்த்தருளவேணு மென்கிறார் என்றருளிச் செய்வர்.

139. (அவ்விடத்திலேயே).......ஆழ்வான் அங்ஙனன்றிக்கே.......(ஈடு ஸேவிக்க.)—அவ்விடத்திலேயே—ஆழ்வான்தான் ஓரிடத்தே வழிபோகாநிற்க, ஒரு ஸர்ப்பம் தவளையைப் பிடித்துக் கூப்பிடா நிற்க, 'இது ஆர் அறியக் கூப்பிடுகிறது!' என்று மோஹித்தானும். இவ் வாழ்வான் ப்ரக்ருதிக்குச் சேருமே இவர் நிர்வாஹமும்.

(4-9-2. சாமாறும் கெடுமாறும்.)

140. [கெடுமாறும்] ஒருத்தனை ராஜத்ரோஹியென்று கையையும் காலையும் தறிக்க, இவனை வினவப் புகுந்தவர்கள் 'இப்படிப் பட்டதாகாதே' என்ன, "ஆயிரம் ஐந்நூறென்று சில காசு தா என்னாதே இவ்வளவோடே போயிற்று உங்களநுக்ரஹமிறே" என்றானாம்.

141. (அவ்விடத்திலேயே) [ஏமாறிக் கிடந்தலற்றும்].......பிள்ளையமுதனார் பணிப்பர் [ஈடு ஸேவிக்க.]

(4—9—3. கொண்டாட்டும் குலம்புனைவும்.)

142. சிற்றாள் கொண்டார் "இவர்க்காகில் இது சேர்க்கைப்பல்லிபோலே பணி யன்றோ என்றிருக்கவொண்ணாது" என்றாராம்.

(4—9—8. காட்டி நீ கரந்துமிழும்.)

143. [கூட்டரிய திருவடிக்கள் எஞ்ஞான்று கூட்டுதியே.]..........பிள்ளை திருநறை யூரரையர் 'ஒரு குருவி பிணைத்த பிணை ஒருவராலவிழ்க்கவொண்கிறதில்லை; ஒரு ஸர்வசக்தி கர்மாநுகூலமாகப் பிணைத்த பிணையை அவனைக் காற்கட்டாதே இவ்வெலியெலும்பனான ஸம்ஸாரியால் அவிழ்த்துக்கொள்ளப்போமோ?' என்று பணிப்பர்.

(4—10. ஒன்றுந்தேவும்—ப்ரவேசம்.)

144. எம்பார் ஸகல வேதசாஸ்த்ரங்களையும் அதிகரித்துவைத்து பரதத்வமின்ன தென்று அறுதியிடமாட்டாதே சேப்புக்குக் கூராச் சிற்றறிவாளுண்டோவென்று கண்ட விடமெங்கும் புக்குத் தலை சாய்த்துத் தடுமாறித் திரியாநிற்க, எம்பெருமானார் தர்சநஸ்தரில் எத்தனையேனும் கல்வியில்லாத ஸ்த்ரீப்ராயரும் தேவதாந்தரங்களை அடுப்பிடுகல்லோபாதியாக நினைத்திருக்கிறது இவ்வொன்றுந்தேவும் இப்பக்ஷத்திலேயுண்டாகையிறே என்றருளிச் செய்வர்.

(4—10—2. நாடி நீர் வணங்கும்.)

145. அவன் மேவியுறை கோயில்.)...........'பரமபதத்திலும் ஸம்ஸாரிகள் படுகிற க்லேசத்தையநுஸந்தித்துத் திருவுள்ளத்தில் வெறுப்போடேயாயிற்று எழுந்தருளியிருப்பது' என்று பட்டருளிச் செய்ய, ஆச்சானும் பிள்ளையாழ்வானுமித்தைக் கேட்டு "பரமபதத்திலே ஆனந்த நிர்ப்பரனாயிருக்கிற விருப்பிலே திருவுள்ளத்திலே ஒரு வ்யஸநத்தோடே யிருந்தானென்கை உசிதமோ என்றார்கள்" என்று பண்டிதரென்கிறவர் வந்து விண்ணப்பஞ் செய்ய, * வ்யஸநேஷு மநுஷ்யாணாம் ப்ருசம் பவதி து:க்கித: * என்றது குணப்ரகரணத்திலேயோ? தோஷ ப்ரகரணத்திலேயோ வென்று கேட்கமாட்டிற்றிலீரோ? இது குணமாகில் குறைமென்று பேர்பெற்றவற்றில் அங்கில்லாததொன்றுண்டோவென்று அருளிச்செய்தார்.

(4-10-4, பேசநின்றசிவனுக்கும்.)

146. (ஓர் அவம்பறைதல்.) ....மஹாபலி ஸ்ரீப்ரஹ்லாதாழ்வான் பக்கலிலே வந்து ராஜ்யமடைய ஒளிமழுங்கிவாராநின்றது, இதுக்கு அடியென்? என்ன; நீ ஸர்வேச்வரன் பக்கல்பண்ணின அபராதத்தாலே காண் என்ன; கோயம் விஷ்ணு:! என்றாப்போலே சில அநாதரோக்திகளைப் பண்ண, என் தலையையறுத்து என்கையிலே தந்தாயாகில் என்பேரன் பண்ணின வுபகாரமென்றிருக்கலாயிற்று; என்முன்பே பகவந்நிந்தையைப்பண்ணினாய்; நீ ராஜ்ய ப்ரஷ்டனாவாய் என்று சபித்துவிட்டான. இத்தை இப்படியே பட்டரருளிச் செய்தவாறே, ப்ரக்ருதி புருஷவிவேகம் பண்ணியிருக்கிறவிவன் ஆத்மாவுக்கு ஸங்கோசம் வருவதொன்றை சபியாதே "ராஜ்ய ப்ரஷ்டோ பவ—ராஜ்யப்ரஷ்டஸ் ததா பத" என்பானென்? என்றுகேட்க; நாயை தண்டிக்கையாகிறது அமேத்யத்தை விலக்குகையன்றோ; சாந்தை விலக்குகை அதுக்கு அநபிமதமன்றே; இவனுக்கு அநிஷ்டம் செய்கையாவது இதுவேயிறே என்றருளிச் செய்தார்.

(4—10—7. ஓடியோடிப் பலபிறப்பும்.)

147. [பல்படிகால்வழியேறிக்கண்டீர்.] ....பகவத்ஸமாச்ரயணம் பண்ணி ஜ்ஞாநாதிகராயிருப்பாரொருவர் [திருமழிசைப்பிரான்] இருந்து தம்முடைய வஸ்த்ரத்தைத் புரையாநின்றாராய், அவ்வளவிலே தேவனும் தேவியுமாகப் போகாநிற்க அநாதரித்திருந்தாராய், தேவியானவள், நீர் ஸர்வாதிகராயிருக்க உம்மைக் கண்டவிடத்தில் இவன் அநாதரித்துக் காலை நீட்டிக்கொண்டிருந்தானே! என்ன, அவன் பகவத்பக்தன்போலேகாண்! என்ன; அதுதானிருக்கிறபடியறிவோமென்று இருவருமிவர்பக்கலிலேவந்து, நீயென்! தேவர்களை மநுஷ்யர்கள் கண்டால் அநுவர்த்தித்து வேண்டும்வரங்களும் வேண்டிக்கொள்ளக் கடவர்களாயிருப்பர்கள், நீ நம்மைக்கண்டவிடத்தில் நீட்டின காலை முடக்குதல், சில வுபசாரங்களைப் பண்ணுதல், சிலவற்றை வேண்டிக்கொள்ளுதல் செய்யாதேயிருந்தாயீ! என்ன, அழகிது, அவையெல்லாம் செய்யக்கடவேன்; மோக்ஷம் தரலாமோ? என்ன; அது நம்மாலே செய்யலாமதன்று; பகவத்ஸமாச்ரயணம் பண்ணி அவன் ப்ரஸாதத்தாலே பெறவேணும் என்ன; ஆனால் இன்று சாவாரை நாளைச் சாவப்பண்ணலாமோ? என்ன; அதுவும் கர்மாநுகுணமாயிறேயிருப்பது, நம்மால் செய்யப்போகாது என்ன? ஆகில் நீ செய்யுமது இவ்வூசிபோனவழியே நூலும் போம்படி அநுக்ரஹித்து நடக்குமித்தனை என்ன; தேவனும் கோபத்தாலே நெற்றியிற் கண்ணைக்காட்ட இவரும் காலிலே அநேகங்கண்ணை உண்டாக்கிக் காட்டினார்.

(அவ்விடத்திலேயே, மேலே)

148. யயாதி சரிதத்தை பட்டர் வாசித்துப் போந்திருக்கச் செய்தே பிள்ளை விழுப்பரையரும் ஆப்பான் திருவழுந்தூரரையருங்கூட வேதோபப்ர்ம்ஹணார்த்தமாக ப்ரவ்ருத்தமான ப்ரபந்தங்களில் இது எவ்வர்த்தத்தை விசதீகரிக்கிறது? என்று கேட்க; க்ஷுத்ர தேவதைகள் தந்தாமையாச்ரயித்துப் பெற்றாலும் பிறர் பக்கலிலே ஓர் உத்கர்ஷம் கண்டால் அது பொறுக்கமாட்டார்களென்றும், ஸர்வேச்வரனே பிறர்வாழ்வு நம் வாழ்வு என்று நினைத்திருப்பானென்றும் சொல்லி, ஆனபின்பு இதர தேவதைகள் ஆச்ரணீயரன்று, இவனொருவனுமே ஆச்ரணீயனென்னு மர்த்தத்தைச் சொல்லுகிறது என்றருளிச் செய்தார்.

(அவ்விடத்திலேயே, மேலே)

149. யாதவர்கள் முடிவிலே வந்தவாறே வாட்கோரையையிட்டு ஒருவரையொருவர் எறிந்து முடிந்து போனார்களென்று கேட்டவாறே 'க்ருஷ்ணன் இவர்கள் விஷயமாக

சங்கநிதி பத்மநிதி தொடக்கமானவற்றைக் கொடுவந்து கொடுத்துச் செய்யாதனவில்லை; பின்னையும் முடிவிலே வந்தவாறே இப்படியேயாயிருந்தது; நம்முடைய பகவத் ஸமாச்ரயணத்துக்கும் பலம் அங்ஙனே யாகிறதோவென்று அஞ்சியிருந்தோம்' என்ன, 'அங்ஙனாகாது அஞ்சவேண்டா, அவர்கள் 'இவன் என்தோழன், மைத்துனன்' என்று தேஹ ஸம்பந்தத்தைக் கொண்டு விரும்புகையாலே அவர்களுக்கு தேஹாவதியாய்விட்டது; நாம் ஸ்வரூப ஜ்ஞானத்தாலே நித்யனான ஆத்மாவுக்கு வகுத்தபேறு பெறவேணுமென்று பற்றுகையாலே பேறும் யாவதாத்ம பாவியாயிருக்கும்' என்றருளிச் செய்தார்.

ஐந்தாம் பத்து.

(5—1—1 கையார் சக்கரத்து)

150. [காப்பாரார்].........*மித்ரபாவே ந* என்கிற ச்லோகத்தில், எம்பார், ஸர்வஜ்ஞனுக்கு ஒரு அஜ்ஞானமும் விஸ்ம்ருதியும், ஸர்வசக்திக்கு ஒரு அசக்தியுமுண்டு என்றருளிச் செய்வர். ஒருவன் தன்னை யாச்ரயித்தால், முன்பு புத்திபூர்வம் பண்ணின குற்றத்திலே விஸ்ம்ருதிபண்ணி, ஜ்ஞானம் பிறந்தால் ப்ராமாதிகமாய் வருமவற்றிலே அஜ்ஞனும்; அவனை விடவேண்டி வருமளவிலே அசக்தி; இப்படி இருக்கைக்கு அடி ஸ்வாபாவிகமான குடல் துடக்கு.

(5-1-4. என்கோள்வனுன்னைவிட்டு.)

151, அவதாரிகையில், பட்டர் நிர்வாஹமும் நிர்வாஹாந்தரமும் ஈடு ஸேவித்துணர்க.

(5—1—7. அம்மானாழிப்பிரான்.)

152. [அவனெவ்விடத்தான் யானார்] பிள்ளையமுதனார் 'அம்மானாழிப்பிரான்' என்று மேலே காட்டி 'யானார்' என்று குறையச்சொல்லிக்காட்டுவர்.

(5—1—9. ஆவாரார் துணையென்று)

153. ஆளவந்தாரருளிச்செய்ததாகத் திருமாலையாண்டான் பணிக்கும்படி; (திருச் சக்கரம் சங்கினொடும் அடியேனொடுமானன் என்று.) கையிலாழ்வார்களோடு பொருந்தினாற்போலே என்னோடேவந்து கலந்தானென்கிறார் என்று. அத்தை எம்பெருமானார் கேட்டருளி, இங்ஙனேயாக வடுக்கும்—*கூராராழி வெண்சங்கேந்தி வாராய்* என்றாயிற்று இவர் ஆசைப்பட்டிருப்பது; ஆசைப்பட்டபடியே திவ்யாயுதங்களோடே வந்து கலந்தானென்கிறார் என்று அருளிச்செய்தருளும்படி.

(5—2. பொலிக பொலிக.—ப்ரவேசம்.)

154. இத்திருவாய்மொழியை ஆளவந்தார்பணித்தாராகத் திருமாலையாண்டான் பணிக்கும்படி-ஆழ்வாருடைய ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீயைக் காண்கைக்காக நித்யஸூரிகள் இங்கேவர, அவர்களைக் கண்டு மங்களாசாஸநம் பண்ணுகிறாரென்று.*நண்ணாதார் முறுவலிப்பவிலே ஸம்ஸாரிகள் படுகிற க்லேசத்தை யநுஸந்தித்து அதுக்குப் பரிஹாரமாக *ஒன்றுந்தேவிலே பகவத்பரத்வத்தை உபபாதித்துத்திருத்த, அத்தாலே திருந்தி ஸம்ஸாரபரமபத விபாகமற்று அங்குள்ளாரும் இங்கே வரும்படியிருக்கிற விருப்பைக்கண்டு மங்களாசாஸநம் பண்ணுகிறார் என்று, இங்குள்ளார் பக்கலிலே ப்ராதாந்யம் தோற்ற எம்பெருமானார் அருளிச் செய்யும்படி.

(5—2—1. பொலிக பொலிக பொலிக.)

155. ....முற்பட பகவத் ஸம்ருத்திக்கு மங்களாசாஸனம் பண்ணி பின்னை பாகவத ஸம்ருத்திக்கு மங்களாசாஸனம் பண்ணவேண்டாவோ பெரியாழ்வாரைப்போலே என்ன; அப்படியேயன்றோ செய்தது; * வீற்றிருந்தேழுலகிலே பகவத் ஸம்ருத்திக்கு மங்களா சாஸனம் பண்ணினார் கண்டீரே; பின்னை இதிலே பாகவதஸம்ருத்திக்கு மங்களாசாஸநம் பண்ணுகிறார் என்று ஜீயர் அருளிச் செய்தார்.

(5—2—3. திரியுங்கலியுகம் நீங்கி.)

156. [பெரிய கிதயுகம்பற்றி.] கலிகாலாதிகளால் வ்யவஹிதமல்லாத ஒரு போகியான க்ருதயுகத்தையுடைத்தாய். அன்றிக்கே, ஆப்பான் "ஆதிஸ்ருஷ்டியில் க்ருதயுகத்தைக் காண் சொல்லுகிறது" என்பராம்.

(5—2—4, இடங்கோள் சமயத்தை.)

157. [நாடகஞ்செய்கின்றனவே.] இவர்கள் வியாபாரம் இவர்க்கு வல்லாராடினாற் போலேயிருக்கை. எம்பெருமானாருடைய ஸ்திதிகமநசயநாதிகளை நாம் கொண்டாடுமா போலேயும், ஆளவந்தார் நடையை ராஜா கொண்டாடினாப்போலேயும் இவர் கொண்டாடுகிறபடி என்றருளிச் செய்வர்.

(5—3. மாசறு சோதி. ப்ரவேசம்.)

158. (மடலெடுக்கை) வீதராகராயிருப்பார் செய்வதொன்றல்ல; இவர்தம் ஸ்வரூபத்தோடும் சேராது; ஜ்ஞாநாதிகராயிருப்பார் செய்வதொன்றல்ல; ஆனால் இது இருந்தபடியென்? என்னில்; இவற்றுக்கெல்லாம் பரிஹாரம், பட்டர் திருமடலருளிச் செய்கிறபோது அருளிச் செய்தருளினார். (ஈடு மேலே ஸேவிக்க.)

(அவ்விடத்திலேயே, பேலே)

159. "ராவணன் மாயாசிரஸ்ஸைக் காட்டினபோது இதரஸ்த்ரீகள் அஹ்ருதயமாக அழுமாபோலே தன்னுற்றாமையாலே கூப்பிட்டு, இவ்வார்த்தை கேட்டபோதே முடியாதிருப்பானென்?" என்று பட்டரைச் சிலர்கேட்க, "ஜ்ஞாநாஜ்ஞாநங்களன்று ஜீவநநிமித்தம்; அத்தலையில் ஸத்தையாயிற்று; அதுக்கு அழிவில்லாமையாலே யிருந்தாள்" என்றருளிச் செய்தார்.

(5—3—2. என்செய்யுமூரவர்கவ்வை.)

160. [முன்செய்யமாமையிழந்து இத்யாதி.] இதுக்கு மூன்றுபடியாக அருளிச் செய்தருளுவர். (ஈடு ஸேவிக்க.)

(5—3—5 கடியன் கொடியன்.)

161. [அவனேன்றே கிடக்கும்] இதுக்குப் பிள்ளான் பணிக்கும்படி; இத்தோஷங்கள் அவனினவன்றோ என்று. அவன் கடியனென்றால் அவன் கடுமை இப்போதே காணவேணும்; கொடியனென்றால் அவன் கொடுமை இப்போதே காணவேணும்; அவன் துஷ்ப்ராபனென்றால் அவன் துஷ்ப்ராபனானபடியை இப்போதே காணவேணும்; அவன் ஸர்வஸ்வாபஹாரியென்றால் அவன் ஸர்வஸ்வாபஹாரம் பண்ண நான் இழந்திருக்கக் காணவேணும்; அவன் துர்ஜ்ஞேயனென்றால் அவன் துர்ஜ்ஞேயனானதை இப்போதேயறியவேணுமென்றும்; அன்றிக்கே,[அவனென்றேகிடக்கும்] என்னெஞ்சுக்கு மாயாவாத ருசியுண்டாகிலுமறியேன்; அதாவது, விசேஷணாம்சத்தில் தாத்பர்யமின்றிக்கே விசேஷ்யத்துக்கு அவ்வருகு அறிகிறதில்லை. இத்தால் அவன்குண நிபந்தனமன்று அவனோட்டை ஸம்பந்தம், ஸத்தாப்ரயுக்தமென்கை.

(**5—3—6.** அன்னையேன் செய்யிலேன்.)

162. [மணிவண்ணன் வாசுதேவன் வலையுளே.] *ஆழ்வார் திருவரங்கப்பெருமாளரையர் வலையாக அபிநயித்துப்பாடாநிற்க, திருக்கண்களைக் காட்டியருளினார் எம்பெருமானார். * கமலக்கண்ணென்னும் நெடுங்கயிறு * என்னக் கடவதிறே.*

(**5—3—7.** வலையுளகப்படுத்து.)

163. [தலையில் வணங்கவுமாங்கோலோ தையலார் முன்பே] *இத்திருவாய்மொழியை ஆழ்வான் ராஜேந்த்ரசோழனில் ஸந்த்யாஸ தஸ்லிலே நிர்வஹியாநிற்க, ஆமருவிநிரைமேய்த்தான் நம்பியார் என்று நூறு வயஸ்ஸு போந்திருப்பாரொருவர் நடுங்க நடுங்க எழுந்திருந்து நின்று "ஆழ்வான்! தலைமகள் தலையாலே வணங்கப்பெறுமோ?" என்ன; பெறும், சிஷ்டாசாரமுண்டுகாணும், ஸ்ரீஜநகராஜன் திருமகள் அநுஷ்டித்தாள்காணும் *ஶிரஸா அபிவாதய—சிரஸா சாபிவாதய.*...............*

(**5—3—11.** இரைக்குங் கருங்கடல்)

164. [இரைக்குங் கருங்கடல் வண்ணன்] *அனந்தாழ்வான் பணித்தானாக நஞ்சீயர் வந்து பட்டருக்கு, * ஆவஹ நய—சாபமாநய * என்றபோது கடல் கீழ்மண்கொண்டு மேல்மண்ணெறிந்தாற்போலேயாயிற்று இவள் மடலூர்வன் என்ற துணிவைக் கேட்டு அவன் தன் ஸர்வாதிகத்வம் கலங்கினபடி என்றருளிச்செய்தார்.*

(**5—3—6.** பின்னின்ற காதல் நோய்.)

165. [இங்நின்ற நீளாவி காப்பாரார்] *.........இத்தை முடித்து நம்மை நோக்குவார் ஆர்! என்கிறதென்று இப்படி முறுகச் சொன்னது தன்னை ஒரு தமிழன் இச் சப்தத்துக்குத் தாத்பர்யமாக இட்டு வைக்கிறான்—பிரிவிலும் முடியாத என்னுயிர்ப்பகையை நீக்கி என்னை நோக்குவாரார்? என்று.*

(**5—3—7.** காப்பாராரிவ்விடத்து)

166. [செல்கின்ற கங்குல்வாய்] *தமிழாசாரியன் என்று தமிழர்க்கு அகஸ்த்யனோடு பாதியாயிருப்பானொருவன் "செல்கின்ற நாளகத்து" என்று வ்யாக்யானம் பண்ணிவைத்தான்.*

(**5—5—1.** எங்ஙனேயோ வன்னைமீர்காள்.)

167. *கூரத்தாழ்வார் ஒரளவிலே நங்கையார் திருவடிச்சார்ந்தவாறே இன்னமுமொரு விவாஹம் பண்ணுவோமோவென்று விசாரித்து இதுதான் க்ரமத்தாலே வந்து ஆழ்வானுக்கு விரோதமாய்த் தலைக்கட்டும்; இனித்தான் * அநாச்ரமீ ந ஸந்திஷ்டேத் * என்று சாஸ்த்ரம் சொல்லாநின்றது; இச்சாஸ்த்ரார்த்தத்தை யநுஷ்டிப்போமோ? பாகவதபரிசர்யை பண்ணுவோமோ? என்று விமர்சியா, அந்த ஸாமாந்ய தர்மத்திற்காட்டில் இந்த விசேஷ தர்மமே ப்ரபலம் என்று தவிர்ந்தார்.*

(**5—5—7.** நிறைந்தவன்பழி.)

168. [நிறைந்தவித்யாதி.] *ஆண்டாள் ஒருநாள் பட்டரையும் சீராமப்பிள்ளையையும் காட்டி 'இவர்கள் விவாஹப்ராப்தரானார்கள், பேசாதே இருக்கிறதென்?' என்ன, 'ஆகில் நானைப் பெருமாள்பாடே போனவாறே வரக்காட்டு' என்ன, அவர்களையுங் கொண்டு திருமுன்பே நிற்கச்செய்தே பெருமாள் அருளப்பாடிட்டு 'ஒன்று சொல்லுவாய் போலேயிருந்தாயீ!' என்று திருவுள்ளமாக, 'இவர்கள் விவாஹ ப்ராப்தரானார்களென்று சொல்லாநின்றார்கள்' என்ன, நாமே ஸத்ருசமான விடத்தில் ஸம்பந்தித்துத் தருகிறோம் என்றருளிச்செய்து,*

பிற்றைநாள் மன்னியைக்கொண்டு வந்து நீர்வார்த்தார்கள். ஆக, அத்தலையாலே வரும தொழிய தாந்தாம் ஒன்றை ஆசைப்படுகையுங்கூட பழியென்றிருக்குங் குடிகாணும்.

(5—6—7. உற்றார்களெனக்கில்லை.)

169. [உற்றார்களையழிப்பேனும்] அவர்களுக்கு ப்ரயோஜநாந்தரங்களிலே ருசியுண்டானால் அந்த ப்ரயோஜனங்களைக் கொடுத்து என் பக்கலில் நின்றுமகற்றுவேன் நானென்னும். அன்றிக்கே, ஆண்டான் பணித்தானாக இளையபெருமாள் 'அவர்களை ஸௌந்தர்யாதிகளாலே அழிப்பேனும் நானென்னுநின்றாள்' என்றருளிச்செய்வர்.

(5—6—9. கோடியவினையாதும்.)

170. [கோடியானிலங்கை செற்றேனேயென்னும்] இவ்விடத்தில் கொடியானென்கிறவிடம் திருத்தாயார் வார்த்தைகாண் என்றருளிச்செய்வர் ஜீயர். எதிரிகளை இவன் ஒன்றாக மதித்திருந்தானாகாமைக்கு; அவனாலே ஆவிஷ்டையிறே இவள்.

(5—6—10. கோலங்கோள் சுவர்க்கமும்.)

171. கோலங்கோள் இத்யாதி.].........நரகத்தோடொத்திருக்கச் செய்தே வாசலிலே கழுஞ்சு செம்மண் பூசியிருக்கும் போலேகாண் என்றருளிச்செய்வர்.

(5—7—2. அங்குற்றேனல்லேன்)

172 [உன்னையித்யாதி.]..........உன்னைக் காணவேணுமென்றாசையாலே பலஹீநனாய்த் தளர்ந்து இனி உபாயாநுஷ்டாநக்ஷமனல்லேன்; இது பூர்வர்கள் நிர்வாஹம்.............
(மேலே ஈடு ஸேவிக்க.)

(5—7—7. வந்தருளியென்னெஞ்சிடம்.)

173. வந்தருளி இத்யாதிக்கு—பட்டர் ஸ்ரீ புஷ்பயாகமணித்தானவாறே நஞ்சீயரைப் பலகாலும் இயல்கேட்டருளுவர்; ஒரு கோடையிலே திருவீதியிலே நீரைவிட்டு எழுந்தருளியிருந்து இப்பாட்டை இயல் சொல்லுமென்று ஜீயரையருளிச் செய்து 'தாம் இத்தையநுஸந்தித்திருந்து அநந்தரத்தே தாமுமிப்பாட்டை இயல்சொல்லி யமகியமாதிக்ரமத்தாலே ஜ்ஞேயவஸ்துவை மநநம் பண்ணிப் புறம்புள்ள பராக்கையறுத்து அநுஸந்திக்கப்புக்காலும் சுக்கான் பரல்போலேயிருக்கக்கடவ நெஞ்சுகள் பதஞ்செய்யும்படி தார்மிகராயிருப்பார் இவை சில ஈரச் சொற்களைப் பொகட்டுப்போவதே, என்றருளிச் செய்தார். நஞ்சீயர் இவ் வார்த்தையை உருத்தோறுமருளிச்செய்வரென்று அருளிச் செய்வர்.

(அவ்விடத்திலேயே, மேலே)

174. ஆப்பான் திருவழுந்தூரரையர் கையிலே தாளத்தை வாங்கி 'வந்தருளி, வந்தருளி' என்று மேல் போகமாட்டாதே படுவராம்.

(5—7—10. ஆறெனக்கு நின்பாதமே.)

175. [ஆறெனக்கு இத்யாதி.]........உபாயோபேயங்களிரண்டும் உன் திருவடிகளேயாம்படி பண்ணித்தந்தாயே என்று பிள்ளான் பணிக்கும். இவையிரண்டாலும் உபாயத்தையே சொல்லுகிறதென்று பட்டர் அருளிச் செய்வர். (மேலே ஈடு ஸேவிக்க.)

(அவ்விடத்திலேயே, மேலே)

176. [நின்பாதமே—எனதாவியுமனதே] என்று நின்பாதமேயென்கிறவிடத்தை இங்கே அந்வயித்து சபதமாக்கி நிர்வஹிப்பர் ஆப்பான் திருவழுந்தூரரையர்.

(5-8-1. ஆராவமுதேயடியேனுடலம்.)

177. [ஆராவமுதே]..........உத்தரபூமியிலே லோகஸாரங்க மஹாமுனிகள் வர்த்தியா நிற்க இங்குத்தையானொருவன் அங்கேறச் செல்ல, பிள்ளாய்! தக்ஷிணபூமியில் விசேஷமென்? என்று கேட்க, திருவாய்மொழியென்றொரு ப்ரபந்தமவதரித்து சிஷ்டர்கள் பரிக்ரஹித்து போரக் கொண்டாடிக் கொடு போராநின்றார்கள் என்ன; அதிலே உனக்குப் போவதொரு சந்தைசொல்லிக்காணாய் என்ன; * ஆராவமுதே * என்கிற வித்தனையும் எனக்குப்போம் என்ன; நாராயணாதி நாமங்கள்கிடக்க, இங்ஙனேயுமொரு நிர்தேசமுண்டாவதே! என்று அத்ருப்தராய் இச்சொல்லு நடையாடுகிற தேசத்தேறப் போவோம் என்று அப்போதே புறப்பட்டுப்போந்தார்.

(5-8-4. சேலக்காண்கிற்பார்)

178. [ஆகாசத்தைநோக்கி] என்னுடைய நிராலம்பநதையைப் பார்த்து என்று ஆண்டான்வார்த்தை.

(5-8-9. இசைவித்தென்னை.)

179. [சேழுமாமணிகள் சேருந்திருக்குடந்தை] ஆராவமுதாழ்வார் திருமழிசைப்பிரான் போல்வார் புருஷரத்நங்கள் சேரும் திருக்குடந்தை என்று நிர்வஹிப்பர்கள்.

(5—9. மானேய்நோக்கு, ப்ரவேசம்)

180. ......இதுதான் நான் அநுபவித்தேனென்று ஜீயர் அருளிச்செய்வர். பட்டர் திருவடிகளை யாச்ரயித்தபின்பு ஒருகால் மேல்நாட்டுக்கெழுந்தருளி மீண்டு பெரியத்வரையோடே திருநாளுக்குதவவேணுமென்று வர, திருக்கரம்பன் துறையளவிலே வந்தவாறே அசிந்திதமாக ஆறு பெருகிக்கிடக்க, இராத்திருநாளெழுந்தருளி இங்குண்டான ஸம்ப்ரமங்களெல்லாம் செவிப்படுவது, வந்து புகுரப்பெறாதொழிவதாய்க்கொண்டு போர நோவுபட்டோமென்று அருளிச்செய்வர்.

(5-9-1. மானேய் நோக்குநல்லீர்.)

181. [மானேய் நோக்கு நல்லீர்] நான் திருவல்லவாழிலே போய்ப்புகும்படி உங்கள் கண்ணாலே குளிரநோக்கி ப்ரஸாதிக்க வேணுமென்கிறாளென்று பிள்ளான் பணிக்கும்,

(அவ்விடத்திலேயே, மேலே)

182. ஜநநாத ப்ரஹ்மராயர் திருமுடிக்குறையிலே ஒரு மரம் வெட்டப்புக, அத்தை எம்பார் கேட்டு 'அல்லாளப்பெருமாளே! ஈச்வர விபூதியை அழிக்கப்பார்த்தாயோ? என்ன, இவர் சொல்லும் வார்த்தை கேட்கைக்காக 'ஈச்வரவிபூதியல்லாத விடமுண்டோ?' என்ன, 'அவைபோலன்றுகாண் இவை; ஸார்வபௌமனை ராஜாவும் மஹிஷியுமாக முற்றாட்டாகக் குடநீர்வார்த்து ஆக்கும்சோலைபோலே பெருமாளும் பெரியபிராட்டியாருங்கூடக் கை தொட்டு ஆக்குமவைகாண்' என்றருளிச் செய்தார்.

(அவ்விடத்திலேயே. மேலே)

183. நல்லான் பட்டர் ஸ்ரீபாதத்தையாச்ரயித்து நெடுங்காலம் ஸேவித்து பின்பு அந்திமதசையிலே பட்டரெழுந்தருளி 'என் நினைத்திருந்தாய்' என்ன, ஒரு ஸர்வசக்தி உபகரிக்கும்போது இங்ஙனே கனக்கவாகாதே உபகரிக்குமது என்று நினைத்திருந்தேனென்ன; அதுவென்? உன்தேசத்தைவிட்டு பந்துக்களைவிட்டு நெடுந்தூரம்போந்து இங்ஙனே நோவுபட்டுத் திருவடிசேரக் கிடந்தாயாகில் இங்கு உபகாரமென்? என்ன, தேசாந்தரத்திலேயிருந்து அப்ரஸித்தனாய் விழுந்துபோகக்கடவ வென்னை இவ்வளவும் அழைப்பித்து உம்முடைய திருவடிகளை யாச்ரயிக்கப்பண்ணி ருசியை விளைப்பித்து இத்தேசத்திலே உம்முடைய கண்வட்டத்

திலே சரீர வியோகமுண்டாம்படி பண்ணினனே என்ன; ஆனாலும் தானாக அபிமானித்த சரீரம் போகாநிற்க நீ இங்ஙன் நினைத்திருந்த தென்கொண்டு? என்ன; ப்ரமாணங்கொண்டு நினைத்திருந்தேன் என்றான்.

(5—9—3. சூடுமலர்க்குழலீர்.)

184. [சூடுமலர்க்குழலீர்] உங்களைச் சூடுமலர்க்குழலாராக நான் காண்பதென்றோ? என்று பிள்ளான். அதாவது, இவள் பூவுக்கு இறுய்க்க, அவர்கள் பூச்சூடியிரார்களிறே என்றாயிற்று அபிப்ராயம். அங்ஙனன்றிக்கே, அவன்தான்வந்து இவள் பக்கல் பாவபந்த முறைக்கவுறைக்கக் கொண்டாடுவது இவர்களையாகையாலே, பெரிய திருநாள் ஸேவித்தார் இரட்டைகள் அழுக்கானாலும் மடிகுலையாமே வைக்குமாபோலே இவர்களும் அவன் கொடுத்த மாலையில் செவ்வியழிந்ததேயாகிலும் மாறாதேவைத்துக் கொண்டிருப்பர்களிறே.....

(5-9-4- நிச்சலுந்தோழிமீர்காள்.)

185. ......[நிச்சலுந்தோழிமீரித்யாதி.] * மாசறு சோதி தொடங்கி இவ்வளவும் வர ஹிதஞ்சொல்லுகிற நீங்கள் என்ன ப்ரயோஜநம் பெற்றிகோள்? என்று பிள்ளான்.

(அவ்விடத்திலேயே, மேலே)

186. [பச்சிலைநீள்கமுகும் பலவும் தேங்கும் வாழைகளும்]............பச்சிலைநீள் என்கிறத்தை அவற்றிலேயும் உய்ந்தபிள்ளை கூட்டும்படி காணும் என்று ஜீயர் அருளிச் செய்வர்.

(5-9-10. தோல்லருள் நல்வினையால்)

187. [நல்வினையால்]........நா நீரற்றிருக்கை பாபபலமிறே; நா நீருண்டாய்த் திருநாமம் சொல்லவல்லோமே என்கிறாள் என்று அம்மங்கியம்மாள் வாக்யார்த்தமாகச் சொல்லும் என்றருளிச் செய்வர்.

(5—10. பிறந்தவாறும் ப்ரவேசம்.)

188. ஆழ்வார்களெல்லாரும் க்ருஷ்ணவதாரமென்றவாறே போரமண்டியிருப்பர்கள்; இதுக்கு ஹேதுவென்? என்று பட்டரைக் கேட்க, ஒருவனுக்கு துக்கம் சிலநாள்கழிந்தால் பொறுக்கலாம்; அணித்தானால் ஆறியிருக்கப் போகாதிறே; அப்படியே அல்லாத அவதாரங்களைப் போலன்றிக்கே ஸமகாலமாகையாலே ஒரு செவ்வாய்க்கிழமை முற்படப்பெற்றிலோம்; பாவியேன்! பல்லிலேபட்டுத் தெறிப்பதே! என்னுமிழவாலே வயிறெரித்தலேயாயிருக்கும் என்றருளிச்செய்தார். இனித்தான் ராமாவதாரத்தில் தமப்பன் சம்பராந்தகனை ஏக வீரனாயிருப்பானொருவன்; பிள்ளைகள் தாங்கள் ஆண்புலிகள்; குடிதானே வன்னியமறுத்திருப்பதொரு குடி; இவையெல்லாம் மிகையாம்படி குணத்தாலே நாட்டையெல்லாம் ஒரு மார்வெழுத்தாக்கிக்கொண்டிருப்பர்கள்; ஆகையால் எதிரிகள் என்கிற சப்தமில்லை; இங்கு அங்ஙனன்றிக்கே தமப்பன் ஒரு ஸாது வ்ருத்தன்; பிறந்தது கம்ஸன் சிறைக்கூடத்திலே; வளர்ந்ததும் அவனகத்தருகே. ஸ்ரீப்ருந்தாவனத்திலே எழும் பூண்டுகளகப்பட அஸுரமயமாயிருக்கும். ரக்ஷகரானவர்கள் ஓரடி தாழ நிற்கில் பாம்பின் வாயிலே விழும்படியாயிற்று இவன்தன்படிகளிருப்பது; அப்படியானால் வயிறெரியாதே செய்வதென் இவர்கள்? அக்காலத்திலே உணர்ந்து நோக்கப்பெற்றிலர்கள். அவ்விழவுக்கு இன்றிருந்து நோவுபடுகிறார்கள்.

(அவ்விடத்திலேயே, மேலே)

189. "இவர் அவனுடைய அவதாரங்களையும் ஜகத்ஸ்ருஷ்ட்யாதி வ்யாபாரங்களையும் *தாயர்மகிழவொன்னார் தளரத் தளர் நடை நடந்த *என்கிறபடியே ஆச்ரிதரை வாழ்விக்கவும் அநாச்ரிதரை அழியச் செய்யவும் அடியிட்டு அப்படி வளர்ந்தருளின க்ருஷ்ணவதாரத்தையும்

அநுஸந்தித்து மிகவும் சிதிலரானவிவர், தரித்து நின்று உன்னையநுஸந்திக்க வல்லேனும்படி பண்ணியருளவேணுமென்று அவனை சரணம் புகுகிறார் என்று ஆழ்வான் பணிக்கும். அன்றியே, விச்லேஷஸமயத்திலே உன் குணங்கள் புத்திஸ்தமாய்க்கொண்டு மிகவும் நலிய, அத்தாலே நெருக்குண்டு நோவுபடுகை தவிர்ந்து உன் திருவடிகளிலே வந்து சேர்ந்து உன்னைக் கிட்டியநுபவிக்கும்படி பண்ணியருளவேணுமென்று அவனைக்குறித்து அருளிச் செய்கிறாரென்று எம்பாரருளிச்செய்யும்படி. அங்ஙனன்றிக்கே ஸர்வேச்வரன் க்ருஷ்ணனாய் வந்து திருவவதாரம் பண்ணித் திருவாய்ப்பாடியிலே வளர்ந்தருளாநின்றான் என்று கேட்டு அங்கே யதாமநோரதம் நமக்குக் கலந்து பரிமாறலாமென்று தெற்குத் திருவாசலாலே சென்றுபுக, இப்போது இங்ஙனே வடக்குத் திருவாசலாலே புறப்பட்டுத் தன்னுடைச் சோதியேற வெழுந்தருளினானென்று கேட்டு விழுந்து கிடந்து கூப்பிடுகிறாரென்று பிள்ளான் பணிக்கும் என்றருளிச் செய்வர்.

(**5—10—2.** வதுவை வார்த்தையுள்.)

190. [அதுவிதுவுது இத்யாதி.] இத்தால் சொல்லிற்றாயிற்று—இப்பாட்டில் மூன்றர்த்தம் சொல்லாநின்றது; அதாவது—அநுகூல ஸம்ச்லேஷமும் ப்ரதிகூல நிரஸநமும் பத்யஸ்தரக்ஷணமுமான இவற்றை அதுவிதுவுது என்கிறது என்னும் பிள்ளான்.

(**5—10—4.** கள்ளவேடத்தை.)

191. ......பண்டு ஒரு ராஜா 'ருத்ரதத்வமே பரதத்வம்' என்றெழுதி எழுத்திட்டுத் தாருங்கோள் என்ன, அப்படி பலரும் எழுதி எழுத்திடா நிற்கச்செய்தே ஒருவர் 'வாராய், நீ இவ்வோலைகெடாமே நோக்கிவைத்தாலிறே இவனுடைய பரத்வம் ஸாதிக்கலாவது, நீ நினைக்கிற தேவதைக்குண்டான உச்ச்ராயங்கள் ஸர்வேச்வரனாலே யென்று ப்ரமாணங்கள் சொல்லாநின்றன, ஆனபின்பு இன்று நீ சொல்ல நான் எழுத்திட்டுப்போகிறேன்; நாளை ஒரு விவக்ஷிதன் தோன்றி 'இவன் அஜ்ஞனாயிருந்தானீ!' என்னக் கேட்பதில் இன்று நீ நினைத்தத்தைச் செய்துகொள்ளமாட்டாயோ? என்றார்.

(அவ்விடத்திலேயே, மேலே)

192. [வெள்ளநீர் இத்யாதி.] இதுக்கு ஆளவந்தாரருளிச் செய்ததாகத் திருமாலையாண்டான் பணிக்கும்படி—ப்ரஹ்மருத்ரர்கள் நடுவே நின்றதொரு முதல் களவுண்டு, அத்தைச் சொல்லுகிறது என்றாயிற்று. அதாவது ருத்ரனையும் தன்னையும் ஸமமாகச் சொல்லாப்படி த்ரிமூர்த்தி மத்யஸ்திதியைச் சொல்லுகிறதென்று; இத்தை எம்பெருமானார் கேட்டருளி "அழகிது, ஆகிலும் அத்தனை தூரம் தேடிப்போகவேணுமோ? இவன் தன் விஷயத்திலே முன்பு பண்ணின உபகாரத்துக்கு ஓரளவுண்டோ? இதுதானே அமையாதோவென்று அருளிச்செய்தார்.

(**5—10—6.** நின்றவாறு மிருந்தவாறும்,)

193. [நின்றவித்யாதி.]........வடக்குநின்றும் போரப்பாட வல்லராயிருப்பாரொருத்தர் பெருமாளைத் திருவடித்தொழவேணுமென்றுவர, ஆழ்வார் திருவரங்கப்பெருமாளரையர் தீர்த்தத்தினன்றிராத் திருமாலையைப் பாடிச்சமைந்து பெருமாளை மத்தகஜங்களை யேத்துமா போலே யேத்தி வசமாக்கிக் கணிசங்கொண்டு 'நாயன்தே! தேவர் திருவடிகளுக்குப்போர நல்லானொருத்தன் எழுநூற்றுக்காதமாறண்டு தேவரைத்திருவடித் தொழவேணுமென்று வருகிறது; இவனையழைத்துக்கொண்டு ஸம்பாவனை பண்ணியருளவேணும் என்ன; பெருமாளும் அப்படியே செய்கிறோம் என்று திருவுள்ளமாய் அருளப்பாடிட்டு, திருப்புன்னைக் கீழ் நின்றும் அவர் நின்றவிடத்தளவுஞ் செல்ல, நாலுகோல்தரை திருக்கைத்தலத்திலே யெழுந்தருளி விண்ணப்பஞ் செய்வார்களை யெல்லாம் அருளப்பாடிட்டு, வாரீகோள்! இவன்